இலவசப் பத்
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 17 (21.01.2003) செவ்வாய்க்கிழமை இதழ் : 112

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ
(சி-485)

## உள்ளூர் பத்திரிகையில் வெளியான 'ராகிங்' விவகாரம்

# உண்மைக்குப் புறம்பானது; குறுகிய வர்த்தக நோக்குடையது; யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம்!

## உண்மை இருந்தால் நிரூபிக்குமாறும் குறிப்பிட்ட பத்திரிகைக்கு பகிரங்கச் சவால்

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் பத்திரிகையொன்றில் வாசகர் ஒருவர் எழுதியதாகக் கூறி கடந்த 16 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட ராகிங் தொடர்பான செய்தியில் எவ்வித உண்மைத்தனமும் இல்லையென்றும், குறுகிய வர்த்தக நோக்கை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தைச் சீண்ட முயல்வது மட்டுமல்ல - ஒட்டுமொத்தமான எமது சமூகத்தின் கௌரவத்தினையே கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் அப்பத்திரிகை- குறித்த செய்தியை வெளியிட்டதாகக்கூறி, அதனைக் கண்டித்தும்- அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரியும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இது தொடர்பாக, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் நேற்று முதல் பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.

கடந்த 16 ஆம் திகதிய உள்ளூர் பத்திரிகை ஒன்றில், பொறுப்பற்ற விதத்தில் வெளிவந்த பல்கலைக்கழகம் பற்றிய செய்தி தொடர்பாக, அன்றிலிருந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் முழுமையான விசாரணைகளை மேற்கொண்ட போதிலும் அவ்வாறான சம்பவத்தினை இனங்காண முடியவில்லை என்பதுடன், அவ்வாறான ஒரு சம்பவம் நடந்திருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் கூட இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

# அதி உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஜனாதிபதி–பிரதமர் நாளை சந்திப்பு!

## அமைதிப்பேச்சு பற்றியும் ஆராயப்படும்

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய முக்கிய கலந்துரையாடலொன்றை நாளை கொழும்பில் நடத்தவிருக்கின்றனர்.**

இது குறித்து தகவல் தெரிவித்த பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனான பிரதமரின் இச்சந்திப்பில், தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகவும், அமைதிப் பேச்சுக்கள பற்றியும் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவித்தன.

இவ்வாறான சந்திப்பு ஒன்றுக்காகப் பல தடவைகள் திட்டமிடப்பட்டபோதும் - அவை இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டே வந்தன.

ஆனால் - நாளை நடைபெறும் சந்திப்பு பெருமளவில் உறுதியாக்கப்பட்டிருப்பதாகப் பிரதமர் அலுவலகத்திலிருந்து தெரியவருகின்றது.

இச்சந்திப்பில்- உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய தனது தீர்க்கமான நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை நடைபெறும் பேச்சுக்களில் விஞ்ஞான மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பங்கேற்கவுள்ளார். (01)

## விண்ணாணம் விநாசியர்



யாழ்ப்பாணத்துக்குள்ள உந்தக் கதை. பலாலில ஏறினதும் பாட்டை யெல்லோ மாத்திறினம்...

# படையினர் வசமுள்ள வீடுகள் இன்று முதல் மதிப்பீடு ஆரம்பம்

வடக்கில் படையினர் வசமுள்ள மக்களின் வீடுகள் பற்றிய மதிப்பீடு இடம்பெறவுள்ளது.

பெருநிலப்பரப்பில் மட்டுமல்லாது தீவுப்பகுதிகளில் உள்ள வீடுகளும் இந்த மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஆறு குழுக்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குழுவிலும் மூன்று அதிகாரிகள் அங்கம் வகிப்பார்கள். ஒரு இராணுவ உத்தியோகத்தர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அங்கத்துவர் ஒருவர், யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர் ஒருவருமாக ஒவ்வொரு குழுவிலும் அங்கம் வகிப்பார்கள்.

இந்தப் புள்ளி விபரச் சேகரிப்பு இன்று ஆரம்பமாகவுள்ளது. இதுபற்றிய அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# ஐ.தே.கவை பதவியகற்றியே தீருவோமென இறுதி முடிவு

## சந்திரிகா, ஜே.வி.பி. சந்திப்பில் எட்டப்பட்டது

(கொழும்பு)

தற்பொழுது பதவியில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசை, பதவியில் இருந்து அகற்றுவது என பொதுஜன முன்னணியும் ஜே.வி.பியும் தீர்க்கமான முடிவிற்கு வந்துள்ளன.


நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் இரு கட்சியினருக்குமிடையே நண்பகல் ஆரம்பமான கலந்துரை (10 ஆம் பக்கம் பார்க்க)

# கௌரவமான அரசியல் தீர்வு நாட்டில் ஏற்பட வேண்டும்!

## குருகுல திறப்பு விழாவில் மகிந்த ராஜபக்ஷ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் கட்டப்பட்ட வேதசிவாகம குருகுல கலாசாலையை, எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரியந்த ஜெயசேன, பாரத லக்ஷமன் பிரேமச்சந்திர, பியசேன ஜெயரட்ண, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, ஏ.எச்.எம். பௌசி, (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒன்றிணையும்

## சிறான் தலைமையகத்தில் முக்கிய தீர்மானம்

தமிழர் தாயகப் பகுதியல் பணியாற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் முக்கிய கலந்துரையாடல் கிளிநொச்சியில் உள்ள சிறான் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

10 மணிக்கு ஆரம்பமான இந்தக் கலந்துரையாடல், சிறான் பணிப்பாளர் செல்வின் தலைமையில் நடைபெற்றது.


வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 15 அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றின.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், அனைத்துலக தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்காலம்; திறந்த விவாதங்கள் ஆரம்பம்!

(பிரஸெல்ஸ்)

கடந்த ஒரு வருட காலமாக, ஐரோப்பிய ஒன்றியம் தனது எதிர்கால் செயற்பாடுகள் குறித்து தனது அங்கத்துவ நாடுகளுக்கிடையே கலந்துரையாடி வருகின்றது.



இக்கலந்துரையாடலின் போது பேசப்படும் விடயங்கள் இரகசியமான முறையில் பேணப்படுமாயின், அது பொதுமக்களுக்குச் சந்தேகங்களை ஏற்படுத்தும் என்பதால், திறந்த விவாதங்களைத் தற்பொழுது ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் ஆறு மாதகாலத்திற்குள், அடுத்த தலைமுறையினருக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினர் ஆற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக, அந்த ஒன்றியம் அரசியல் திட்டத்தினை வெளியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள், கடந்த இரண்டு தினங்களாகப் பிரஸெல்ஸில் கூடி அமைப்பு ரீதியான சீராக்கம் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை - ஐரோப்பிய யூனியனினது சீராக்கம் பற்றிய கருத்து முரண்பாடுகள், பிரான்சுக்கும் ஜேர்மனிக்கும் இடையில் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

## காட்டுத் தீயை கட்டுப்படுத்தாததற்கு குற்றச்சாட்டு

அவுஸ்திரேலியத் தலைநகர் கன்பராவில் காட்டுத் தீ பரவிய போது, கன்பராவின் உள்ளூர்ச்சபை தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

காட்டுத் தீயினால் நான்கு பொது மக்கள் இறந்ததுடன் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் - சொத்துக்கள், வீடுகள், உடமைகள் என்பவற்றை இழந்துள்ளனர்.

# லண்டன் பள்ளிவாசலில் ஏழு இஸ்லாமியர்கள் கைது!

வட லண்டன், ∴பின்ஸ்பரி பூங்காவிலுள்ள பள்ளிவாசலில் ஸ்கொட்லண்யார்ட் பொலிஸார், முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த ஏழு நபர்களைக் கைது செய்துள்ளனர்.



இச்சந்தேகநபர்கள்- கடந்த மாதம் வூட் கிறீன் விடுதியில் உணவுகளில் நஞ்சூட்டப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களைக் கைதுசெய்யும் முகமாகப் பள்ளிவாசலிலிருந்து அரை மைல் சுற்றுக்கு முற்றுகையிட்ட பொலிஸார் இரண்டு ஹெலிகொப்டர்கள் மூலம் வந்திறங்கியதாகத் தகவல்கள் தெரிவித்தன.

மேற்படி சந்தேகநபர்களுக்கு, ஐக்கிய இராச்சியத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புகள் இருப்பது பற்றியும் ஸ்கொட்லண்யார்ட் பொலிஸா விசாரணை செய்துவருகின்றனர்.


**R.B.Booking Centre**

**ஆர்.பி(B) பஸ் ஆசனப் பதிவகம்**

யாழ்., கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி பஸ் சேவைகள்.

வைரவர் கோவில் அருகாமை,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. 0777-737368

15, Grand Bazaar,
Jaffna.

யாழ். - கொழும்பு செல்லும் பிரயாணிகளின் வசதி கருதி ஒரே இடத்தில், தரைவழி - வான்வழிக்கான, விமான - மற்றும் சொகுசு பஸ் - வான் ஆகியவற்றுக்கான ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்வதற்கு நாடுங்கள்.


**கண்ணீர் அஞ்சலி**

எமது நண்பன்

**சண்முகலிங்கம் சதீஸ்கரன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

95/96 H.N.D.A.
மாணவ நண்பர்கள்.

(213)


**வாசகர்களே, வாடிக்கையாளர்களே!**

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

**நமது ஈழநாடு விளம்பர முகவர்**

இளவாலையில்

தி.பரஞ்சோதி
அழகுநிலா
கல்லூரி வீதி,
இளவாலை.

தொலைபேசி இல.
070-212532




உலகவலம்

**சிறு விளம்பரம்**

### மூக்குக் கண்ணாடி

1962 ஆம் ஆண்டு தொடக்கம் வெலிங்ரன் திரையரங்கு முன்பாக இயங்கிய மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம் தற்பொழுது பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன்பாக இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (மொறாயஸ்) ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடியகம், யாழ்ப்பாணம். (சி-439)

### தேவை

தையற்கலையில் நல்ல அனுபவமுள்ள பெண்களும், துணி வெட்டும் அனுபவமுள்ள கட்டறும் உடனடியாகத் தேவை. தொடர்பு: 69, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (சி-516)


**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த




10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)


அஜித், விக்ரம், மகேஸ்வரி நடித்த

**உல்லாசம்**

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி

**TOMB RAIDER** (சி-397)


## செய்திப் படங்கள்



நேற்று முன்தினம் நடந்த கியூபாவின் பொதுத் தேர்தலில் வாக்களித்துவிட்டு வெளியேவந்த அதிபர் காஸ்ரோ தனது ஆதரவாளர்களுக்கு உரை நிகழ்த்துகிறார்.



ஈராக் தலைநகர் பக்தாத்தில் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்களுடன் பேச்சு நடத்தும் ஈராக்கிய ஜனாதிபதியின் விஞ்ஞான ஆலோசகர் அமீர் அல்–ஸாதி மற்றும் குழுவினர்.


**ஜோதிடம்**

இந்திய பரம்பரை சாஸ்திரியார்
அருள்வாக்கு அம்பிகா அம்மா

அவர்கள் முதல்முறையாக யாழ். மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும். மற்றும் எந்தப் பிரச்சினைகள் ஆனாலும், ஜோதிட ரீதியாகச் சரி செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: அருள்வாக்கு அம்பிகா அம்மா
மடோனா லொட்ஜ்,
(லிங்கன் கிறீம் ஹவுஸ், ஸ்ரீமுருகன் ஜுவலர்ஸ் அருகில்)
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை பார்க்கப்படும். (212)


## இன்றைய நாள் இனிய நாள்

**21-01-2003 - செவ்வாய்க்கிழமை**

**சதுர்த்தி விரதம்**

**மேடம்** :- விபத்தினால் காயம், திரவியலாபம, தேகசுகக் குறைவு, காரியசித்தி

**இடபம்** :- பெரியோர் மதிப்பு, இல்லச்சிறப்பு, புத்திரரால் கவலை, மனப்பயம்

**மிதுனம்** :- லட்சுமி கடாட்சம், தொழில் சிறப்பு முன்னேற்றம், குடும்ப சுகம்

**கர்க்கடகம்** :- காயங்கள், சோர்வு, திரவிய லாபம், இடையூறு, கலகம்.

**சிங்கம்** :- வாகனச் செலவு, தன நாசம், பிரயாணக் கஷ்டம், குடும்பச் சிறப்பு

**கன்னி** :- களஸ்திர சுகம், தொழில் உறுதி, தனதானிய விருத்தி, சந்தோஷம்

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

**துலாம்** :- மனக்கவலை, பிரயாணத்தால் கேடு, குடும்பச் சிறப்பு, அதிகலாபம்

**விருச்சிகம்** :- பொருள்வரவு, நல்ல வாழ்க்கை, மனஅமைதி, பிரயாணம்.

**தனு** :- நிலைப்பிரிவு, திரவியலாபம், மனப்பயம், தேகசுகம்.

**மகரம்** :- குடும்பச் சிறப்பு, மனச் சந்தோஷம், தொழில் சிறப்பு பணவரவு

**கும்பம்** :- இராச பயம், சத்துரு பீடை, லட்சுமி கடாட்சம், பொருள வரவு.

**மீனம்** :- தனதானிய விருத்தி, குடும்பசுகம், சினேக நன்மை, காரிய சித்தி

# ஐ.தே.க. ஆட்சியைக் கவிழ்த்தால் மீண்டும் யுத்த அபாயம் ஏற்படலாம்

## பிரதியமைச்சர் பந்துல குணவர்த்தன எச்சரிக்கை

(கொழும்பு)

சூழ்ச்சிகளின் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் அகற்றினால் நாட்டில் மீண்டும் யுத்த அபாயம் ஏற்படும் என்று பந்துல குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

பிரதேசசபை மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு சமாதான முயற்சிகள் தொடர்பாக ஐ.தே.கட்சி நடத்திவரும் கொள்கை விளக்கக் கூட்டத்திலேயே பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, ஐ.தே.முன்னணி ஆட்சியை அகற்றினால் தற்போது புலிகளுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுக்கள் முறிவடையும் அது குண்டுவெடிப்புக் கலாசாரத்துக்குள் நாட்டைத் தள்ளிவிடும்.

ஐ.தே.மு. ஆட்சியை அகற்றுவதற்கான சூழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு மட்டங்களிலும் தயாரிக்கப்படுகின்றன. இது நாட்டை இரத்தக் களரி ஒன்றுக்குள்தான் தள்ளிவிடும் எனவும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (01)

# கைத் தொலைபேசிக் கட்டணம் பெப்.முதலாம்திகதி அதிகரிப்பு

(கொழும்பு)

அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து கைத்தொலைபேசிகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக கைத்தொலைபேசி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் கைத்தொலைபேசி அழைப்புக்களுக்கான கட்டணம் நிமிடமொன்றுக்கு ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி தொலைத்தொடர்பு சீராக்கல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருக்கின்றது.

தாம் இந்த அதிகரிப்புக்கான அனுமதியை கோரி நீண்டகாலமாகி விட்டதாகவும், இப்போது தான் தமக்கு அனுமதி கிடைத்திருப்பதாகவும், கைத்தொலைபேசி நிறுவன அதிகாரி மேலும் தெரிவித்தார்

# நாடளாவிய வேலை நிறுத்தம் பொ.ஐ.முன்னணி ஏற்பாடு!

## பெப்ரவரி 06 இல் நடக்கும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை மற்றும் தொழிலாளர் விவகாரச் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர்வரும் 6ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் வேலை நிறுத்தத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அரசாங்கம் செயற்படுத்திவரும் தனியார்மயப்படுத்தற் கொள்கை, விலைவாசி உயர்வு, தொழிலாளர் நீக்கச் சட்டம் என்பவற்றைக் கண்டித்தே இப்போராட்டத்தை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பெப்ரவரி 6ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படவுள்ள இந்த வேலை நிறுத்தப் போராட்டத்துககான ஒழுங்குகளைப் பொதுஜன ஐக்கிய முன்னணி செய்துள்ளது. இது தொடர்பாக ஆராயும் கூட்டம் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றிருந்தது.

இக் கூட்டத்தில் பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் - மக்கள ஐக்கிய முன்னணியின் சார்பில் தினேஷ் குணவர்த்தனாவும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ராஜா கொளுரேயும், லங்கா சம சமாஜக் கட்சி சார்பில் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகப் பொலிஸ்; அமைச்சர் மிலிந்த யோசனை

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும், வன்முறைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கும் பல்கலைக்கழக பொலிஸ் அமைக்கப்பட வேண்டும் என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டியது இப்போது முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. அத்துடன் ராகிங் பிரச்சினையும் அதிகரித்துள்ளது.

பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்கக் கூடிய வகையிலும், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படாத வகையிலும் பல்கலைக்கழக பொலிஸ் அ்மைக்கப்படவேண்டும்.

இதன்மூலமே வன்முறைகளைத் தடுக்க முடியும் என அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்திருக்கிறார்.

# கேணல் கிட்டு நினைவுநாள் ஜேர்மனியிலும் அனுஷ்டிப்பு

(பொன்)

வங்கக்கடலில் காவியமான மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களினதும் 10ஆம் அண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த 18ஆம் திகதி ஜேர்மனியில் நடைபெற்றது.

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு இந்த மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தியதுடன் நினைவு நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக்கொண்டனர்.

# அரசாங்கமும் படைப்பலத்தைப் பெருக்கிக் கொண்டேயிருக்கிறது

## காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறுகிறார்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எமது அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றபோது, புலிகள் தமது படைபலத்தை பெருக்கிக் கொண்டு இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன.

ஆனால், நாமும் எமது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டுதான் இருக்கின்றோம் எனத் தெரிவிக்கின்றார் காணி அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன.

சமாதானப்பேச்சுகளில் பூரணமான நம்பிக்கை கொண்டு அதை முன்னெடுத்துச் செல்கின்றோம். அது தடம் புரண்டால் ஏற்படக் கூடிய அனர்த்தங்களை நன்கு உணர்ந்து அதற்கும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

400 மில்லியன் டொலர் செலவில் விமானப்படைக்கு விமானங்களையும், தளபாடங்களையும் கொள்வனவு செய்திருக்கின்றோம். கடற்படையை நவீனமயப்படுத்துவதற்காக 600 மில்லியன் ரூபா செலவில் கடற்படைப் படகுகளும், யுத்தத் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன என அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# நோர்வே அரச உதவியுடன் வேலைவாய்ப்பு மையங்கள்

அரசாங்கம் நாடு முழுவதிலும் 17 வேலைவாய்ப்பு மையங்களைத் திறக்கவுள்ளது. முதலாவது வேலைவாய்ப்பு மையம் கடந்தவாரம் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவினால் அகலவத்தையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும் கலந்துகொண்டார். இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலான இந்த வேலைவாய்பபு மையங்களை அமைப்பதற்கு அரசாங்கத்துக்கு, நோர்வே அரசு நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

## கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முதல் நடைபெற்றுவருகின்றது. இப்போட்டிகள் 23ஆம் திகதிவரை தினமும் பி.ப 3.00 மணிக்கு கொய்யாத்தோட்டம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

22ஆம் திகதிவரை ஆண்களுக்கான போட்டியும், இறுதி நாளான 23ஆம் திகதி பெண்களுக்கான போட்டியாகவும் இப்போட்டி நடைபெறவுள்ளது. (60)

# மாகாண முதலமைச்சர்களை சந்திரிகா விரைவில் சந்திப்பு

மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் மற்றும் பொ.ஐ.மு. ஆட்சியிலுள்ள மாகாணசபைகளின் ஆளுநர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்றுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.

எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. தற்போதைய அரசியல் நிலை குறித்தும், மாகாண சபைகளின் செயற்பாடுகள் குறித்தும் ஆராய்வதற்கே இக் கூடடம் நடத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

மாகாணசபைகளுக்கு, மத்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதி போதாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில் இது குறிதது ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# சமஷ்டி குறித்து ஆராய்வதற்கு எம்.பிக்கள் ஜேர்மனி பயணம்

சமஷ்டி ஆட்சி முறை பற்றி ஆராயும்பொருட்டு ஐரோப்பாவுக்கு விஜயம செய்துள்ள 15பேர் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் குழு நேற்று முன்தினம் ஜேர்மனிக்குச் சென்றது.

ஜேர்மனியின் சமஷ்டி முறைபற்றி தாம் ஆராயவுள்ளதாக அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு அடுத்ததாக ஒஸ்ரியாவுக்கும், இத்தாலிக்கும் விஜயம் செய்யவுள்ளது.

## ஐ.நா.பொதுச் செயலர் அடுத்து ஆசிய நாட்டவரே

ஐ.நா.பொதுச் செய்லாளராக ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த ஒருவரே தெரிவு செய்யப்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிய வருகின்றது. இப் பதவிக்கு வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவும், ஜெயந்த தனபாலவும் போட்டியிடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## 2003 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திகதிகள்

2003ஆம் ஆண்டுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஜனவரி-9, பெப்ரவரி-6, மார்ச்-6, ஏப்ரல்-8, மே-8, யூன் -10, யூலை-10, ஓகஸ்ட்-7, செப்டம்பர்-9, ஒக்டோபர்-7, நவம்பர்-6, டிசம்பர்-9.

# நான்கு அரசியல் ஆலோசகர்களை; பிரிட்டனிலிருந்து அழைக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை மீளமைப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக பிரித்தானியாவிலிருந்து நான்கு அரசியல் ஆலோசகர்கள் வரவுள்ளனர்.

ஐககிய தேசியக் கட்சியின் எதிர்காலம் குறித்த திட்டங்களை வரைவு செய்யவும், அரசியல் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்தும் இக்குழு சிபார்சுகளை முன்வைக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)



தைப்பொங்கல் விழாவையொட்டி திருமறைக் கலாமன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்வில் வசந்தன் கூத்து மேடையேற்றப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

படம்: சீ.இராகுலன்.

# அமெரிக்காவின் அரசியற்போக்கைத் தீர்மானிக்கும்
# அறிவுசார் சமூகமும் அரசியற் செயற்பாட்டுக் குழுவும்!

அமெரிக்க அரசியற்திட்டத்தினை உருவாக்கிய உயர்குழாத்தினர் தமது நலன்களைப் பேணக்கூடிய வகையில் - அரசியல் திட்டத்தில் சிறப்பியல்புகளை எவ்வாறு வரைந்துள்ளார்கள் என்பதனைக் கடந்த மூன்று வாரகாலக் கட்டுரைத் தொடரிலே வரலாற்றுநோக்குடன் பார்த்துள்ளோம்.

இந்தவகையில் இன்றைய அமெரிகக அரசியலில் - உயர்குழாத்தினர் புதியதொரு பரிமாணத்தினை- கைத்தொழில் வளர்ச்சிக்குப் பின்னான அமெரிக்கச் சமூகத்தில் (Post Industrial American Society) பெற்றதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இன்றுள்ள நிறுவனமயமான அமெரிக்க உயர்குழாத்தினர் தமக்கெனச் சட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளதையும் நாம் ஆராயலாம்.

இவ்வாறு நிறுவனமயப்படுத்தப்பட்ட உயர்குழாத்தினர் அமெரிக்காவின் சட்டசபையான காங்கிரஸில் எவ்வாறு தங்கள் செல்வாக்கினைப் பிரயோகிக்கின்றனர் என்பதனையும்,



அவ்வாறு அவர்கள் தமது செல்வாக்கினைப் பிரயோகிப்பதற்கு ஏற்ற வகையில் காங்கிரஸின் சட்டங்களும், நிலைக்கட்டளைகளும் எவ்வாறு உதவுகின்றன என்பதனையும் இவ்வாரம் பார்க்கலாம்.

உலகின் எந்தவொரு நாடானாலும் சரி அல்லது சமூகமாயினும் சரி- ஆரம்பத்தில் விவசாயச் சமூகமாக இருந்து காலப்போக்கில் அதன் வளர்ச்சிக்கேற்ற விதத்தில் கைத்தொழில் சமூகமாக வளர்ந்து - கைத்தொழிலின் முதிர்ச்சியின்போது, அச்சமூகம் - கைத்தொழிலிற்கும், விவசாயத்திற்கும், சேவைத்துறைக்கும் வேண்டிய அறிவுசார் சமூகமாக மாற்றமடையும். இந்த அறிவுசார் சமூகத்தினை கைத்தொழில் வளர்ச்சிக்குப் பின்னான சமூகம் (Post Industrial Society) எனவும் அறிஞர்கள் அழைக்கின்றனா.

இந்தவகையில், அமெரிக்கச் சமூகம்கூட ஆரம்பத்தில் விவசாயச் சமூகமாக ஆரம்பித்துக் காலப்போக்கில் கைத்தொழில் சமூகமாகப் பரிணமித்து - இன்று கைத்தொழிற்குப் பின்னான சமூகமாக விளங்குகின்றது.

இதற்கேற்ப ஆரம்பத்தில் அமெரிககாவினது அரசியல் திட்டத்தினைப் பிடெல்பியாவில் வரைந்த அமெரிக்கர்கள் விவசாயிகளேயாவார்.

அதன் பின்னர், காலப்போக்கில் கைத்தொழிலாளர்களும் அறிவுடைமைவாதிகளும் அமெரிக்க அரசியற் கலாசாரத்தில் உயர்குழாத்தினராக இன்று விளங்குகின்றனர்.

அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பினைவிட, கைத்தொழிற்துறையின் பங்களிப்பானது - 1920 களின் ஆரம்பத்தில் இருந்து அதிகரித்த பின்னர் - அமெரிக்கா தன்னை ஒரு கைத்தொழில் சமூகமாகவே தகவமைத்துக் கொண்டதையும் இங்கு குறிப்பிடலாம்.

அமெரிக்கச் சமூகமானது கைத்தொழில் சமூகமாகத் தன்னைப் பரிணமித்தபோது - அதன் அரசியல் கலாசாரத்தில் உயர்குழாத்தினர்- "நலன் பேணும் குழுக்களாக" (Interest Groups) தம்மை உயர்த்திக் கொண்டனர்.

இவ்வாறு - கைத்தொழில் சமூகத்தில் உயர்குழாத்தினர் என்ற கௌரவத்தோடு - தமது கைத்தொழில் முயற்சிகளை மேலும் திறன்பட வளர்த்துக் கொள்வதற்கு வேண்டிய அனைத்து வளங்களையும் பெற்றுக் கொள்ள அவர்கள் முயன்றனர்.

சட்டங்கள், நிதிக்கொள்கை, வெளியுறவுக்கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் என்பவற்றில் தங்களுக்குச் சாதகமாகச் செயற்படக்கூடிய அரசியல்வாதிகளை அல்லது அரசியற்கட்சிகளைப் பதவியில் அமர்த்துவதற்கான வேலைத்திட்டங்களை அவர்கள் உருவாக்கினர்.

இவ்வாறு அரசியலில் தமது நலன்களுக்காக செல்வாக்குச் செலுத்தும் குழுவினர், 1930 களில் இருந்து 1960கள் வரை என்றுமில்லாத அளவிற்குச் செல்வாக்குக் கொண்டிருந்தது அமெரிக்கச் சமூகம்.

இந்த நலன்பேண் குழுவினர் - நேரடியாக அரசியலில் ஈடுபடமாட்டார்கள். மாறாக - அரசியல் கட்சியினரின் கொள்கைப் பிரகடனத்தில் தமது செல்வாக்குகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் செலுத்துவார்கள். 1930 களில் இருந்து 1960 கள் வரை சர்வதேச அரசியல் இருதுருவப்பட்டிருந்ததால் - இவர்களது தேவைகள் பதவிக்கு வரும் அரசியற்கட்சிக்கு மிகவும் இன்றியமையாததாக இருந்தது.

அதாவது - சர்வதேச அரசியலில் சோஷலிச முகாமிற்குப் போட்டியாக அமொிக்கா தலைமையிலான முதலாளித்துவ முகாம் இருந்தவேளையில் - அமெரிக்கா, சோவியத் ரஷ்யாவுடன் சர்வதேச அரசியலில் போட்டியிடுவதற்கு தனது உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களை நிறையவே நம்பியிருக்க வேண்டியநிலையில் இந்த நலன் பேண் குழுவினரின் ஒத்துழைப்பு அமெரிக்க ஆளுந்தரப்புக்கு மிக வேண்டியதாக இருந்தது.

இவ்வாறான புறச்சூழல் - அமெரிக்காவின் நலன்பேண் குழுவாகிய கைத்தொழிலதிபர்களுக்குச் சாதகமாக இருந்தமையால் - அவர்கள் தமது நலநோக்கில் தாரளமாகச் செயற்படக்கூடியதாக இருந்தது.

அமெரிக்கச் சமூகத்தில் இவ்வாறு தமது நலன்களை, செல்வாக்குகளை மேலோங்கச் செய்வதற்காக - பொதுப் பதவிகளில், அரச உயர் பதவிகளில், நிர்வாகப் பதவிகளில் தமது நலனை முன்னேற்றும் நபர்களைப் பதவியில் அமரச் செய்வது அவர்களது முக்கிய செயற்பாடாக இருந்தது.

அதேவேளை, இடைநிலை உத்தியோகத்தர்கள் தமக்குச் சாதகமாக இருக்கின்றார்களோ இல்லையோ- ஆனால், தமக்குச் சாதகமாக முடிவுகளை எடுக்குமாறும் தமது நலன்களை முன்னேற்றுமாறும் அவர்களை தூண்டியவாறு நலன்பேணும் குழுவினர் இருந்தனர்.


பொதுசன அபிப்பிராயத்தினையும் தமக்குச் சாதகமான முறையில் ஊடகங்கள் மூலம் பெற்றுக்கொணடு, அதன் பயனை அரசாங்கத்தின் மீது மறைமுகமான செல்வாக்கினைச் செலுத்துபவர்களாகத் தம்மை அவர்கள் தகவமைத்துக் கொண்டனர்.

இவ்வாறு நலன் பேணும் குழுக்கள் தமது செல்வாக்கினை தொடர்ச்சியாக செலுத்துவதற்கு வசதியாக இருந்த இரண்டு காரணிகளையும் நாம் காணலாம். இவை இன்றும் தொடர்ச்சியாக இருந்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

முதலாவது காரணம் - அமெரிக்காவினது மிகப்பெரும்பான்மையான தொழிற்துறை, ஆரம்பம் முதலே தனியாருக்குச் சொந்தமாக இருந்ததாகும்.

இதனால் - எந்தவொரு உற்பத்தி முயற்சியிலும் அமெரிக்க அரசாங்கம் தனியார்துறையை நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருந்தது. அதாவது - அமெரிக்க அரசாங்கம் தனது நல்லாட்சியினை (Good Governance) உறுதி செய்வதற்கு கைத்தொழிலதிபர்களிலேயே தங்கியிருந்தது.

இரண்டாவது காரணியாக -



வெள்ளை மாளிகை - அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம்

அமெரிக்க அரசியற் கலாசாரத்தில் அங்குள்ள ஐம்பத்திரண்டு சமஷ்டி மாநிலங்களிலும்- இரண்டு கட்சிகளான குடியரசுக்கட்சியும், ஜனநாயகக் கட்சியுமே மாறிமாறி பதவிக்கு வரக்கூடியதாக - அங்கு இரு கட்சி முறைமையே காணப்பட்டது/ காணப்பட்டுவருகின்றது.

எனவே, தமது நலன்களை எந்தக் கட்சி உரிய முறையில் கவனிக்கும் எனக் கணிப்பிடுவதற்குக் கைத்தொழிலதிபர்களுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருந்தன.

இந்த இரண்டு காரணிகளும்- அமெரிக்காவின் நலன் பேணும் குழுக்களின் வல்லாதிக்கத்தினை அந்நாட்டின் அரசியலில் உறுதி

**வேலும்மயிலும் சேந்தன்**

செய்தன.

இன்று நிலைமை இன்னமும் விரிவடைந்தது. அமெரிக்கச் சமூகம்- தற்பொழுது கைத்தொழிலுக்குப் பின்னான சமூகமாக மாறிவிட்டது.

அத்தோடு இணைந்ததாக சர்வதேச அரசியலில் சோஷலிச முகாம் வீழ்ச்சியடைந்து, அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவமும் அதற்கான சந்தைகளும் உலகளாவிய அளவில் பரந்து - உலகமயமாதல் என்ற பெயருடன் பரந்து விரிந்துள்ளது.

இந்நிலையில் - அமெரிக்க நாடு தனது வரையறுக்கப்பட்ட அரசியல் புவியியல் எல்லைக்குள் மட்டும்தான் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு அற்றுப்போய்விட்டது.

இவை எல்லாவற்றினையும்விட தகவல் தொழிநுட்பம் பரந்து வியாபித்துவிட்டது. இதனால் தற்பொழுது அமெரிக்கச் சமூகம் அறிவினை உடமையாகக் கொண்ட அறிவுசார் சமூகமாக மாறிவிட்டது.

இந்நிலையில் அமெரிக்காவின் அரசியற் கலாசாரத்தில் உயர்குழாத்தினர் இன்று மிகவும் வலுவான நிறுவனமயப்படுத்தப்பட்ட, கட்டளைச் சட்ட அதிகாரத்தினையுடைய- "அரசியற் செயற்பாட்டுக் குழுவினர்" (Political Action Committees) எனத் தம்மை வடிவமைத்துக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான மாற்றம் 1990 களின் பிற்பாடுதான் ஏற்பட்டதாயினும் 1970 களின் ஆரம்பத்திலேயே அரசியற் செயற்பாட்டுக் குழுவினது தோற்றுவாய் ஆரம்பமாகிவிட்டன என்றும் கூறலாம்.

தற்காலத்தில் - அமெரிக்காவினது அரசியலை நிர்ணயிக்கின்ற அரசியற்செயற்பாட்டுக்குழுவில்/குழுவினரில் - தொழில்வாண்மையாளர்கள் (Professionals), முகாமையாளர்கள் (Managerials), தொழில்நுட்பவியலாளர்கள் (Technologists) ஆகியோர் உயர்குழாத்தினராக (Elites) செயற்பட்டு வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் அரசியற் கட்சிகளில் தேர்தல் செலவுகளுக்கு நிதி தருவது இவர்களது பிரதான

## சுயநிர்ணயம் – ஒரு பார்வை
### பகுதி - 17

தொழிற்பாடாக இருக்கின்றது. இவ்வாறு நிதியிடுவதற்கு வேண்டிய சட்ட அந்தஸ்தினையும் **Federal Election Campaign Act of** 1971 என்ற சட்டத்தின் மூலம் அவர்கள் அதிகாரபூர்வமாக்கிவிட்டனர். இச்சடடத்தின் பிரகாரம் 100 அமெரிக்க டொலர்களுக்குமேல் கொடுக்கும் எந்த அரசியற் செயற்பாட்டுக் குழுவினரதும் நிதியுதவி பற்றிய முழு விபரங்களையும் அரசியற்கட்சி தேர்தல் முடிவடைந்து, பதினைந்து



அமெரிக்காவின் வலிமைமிகுந்த அறிவுசார் சமூகம்

நாட்கள் முதல் ஐம்பது நாட்களுக்குள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தேர்தல் திணைக்களத்திடம் உரிய ஆவணங்களுடன் அறிக்கை செய்ய வேண்டும் என்பதாகும்.

இவ்வாறு நிதியுதவி செய்யும் அரசியற் செயற்பாட்டுக் குழுவினரே- அமெரிக்காவினது பாராளுமன்ற உறுப்பினர்களை, செனட்டர்களை ஏன் ஜனாதிபதியையும் தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்.

இவ்வாறு நிதியீட்டம் எந்தக் கட்சிக்கு அதிகம் கிடைக்கின்றதோ அக்கட்சியினர் அல்லது வேட்பாளர் நிச்சயம் வெற்றி பெறுவர் என்பதும் திண்ணம்.

அதாவது - எந்தக் கட்சியால் மற்றைய கட்சியினைவிடத் தேர்தல் காலங்களில் அதிகம் செலவு செய்ய முடிகின்றதோ, அக்கட்சி வெற்றி பெறுவது உறுதி செய்யப்படுகின்றது. இதனால் அமெரிக்காவினது தேர்தல் காலங்களில் - கருத்துக் கணிப்பீடுகளை மக்களிடம் எடுக்கத் தேவையில்லை - மாறாக, எந்தக்கட்சியினருக்கு அதிக பணம் கிடைத்திருக்கின்றது என்பதை மட்டும் வைத்துத் தேர்தலின் வெற்றியைக் கணிப்பிடக் கூடியதாக இருக்கும் என அவதானிகள் குறிப்பிடுவர்.

இதனால்- அண்மைக்காலங்களில் இரகசியமான முறையில் அரசியற் கட்சியினருக்கு நிதியீட்டம் செய்யப்படுவதாக அமெரிக்க அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


அதாவது - 1971 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் புறம்பான முறையில் எவ்வித ஆவணங்களும் அற்ற வகையில் - 'மேசைக்குக் கீழான முறையில்' நிதி வழங்கப்படுகின்றது. இவ்வாறு நிதியுதவி செய்பவர்கள்- 'கொழுத்த பூனைகள்' (Fat-Cats) என்றே அமெரிக்க அரசியலாளர்கள் அழைக்கின்றனர். இதனால் தேர்தலின் இறுதி நேரத்தில்கூட வெற்றியைத் தீர்மானிப்பவர்களாக இந்த 'கொழுத்த பூனைகள்' காணப்படுகின்றனர். தற்பொழுதுள்ள சூழ்நிலையில் இந்த 'கொழுத்த பூனைகள்' தேசிய எல்லைகளைக் கடந்த கம்பனிகளே என்பது சுவாரசியமான விடயமாகும்.


அமெரிக்காவினது அரசியற் திட்டரீதியாக இந்த கொழுத்த பூனைகளின் ஆதிக்கம் சட்டவாக்க சபையான காங்கிரசுக்குள் நுழையக்கூடிய பாதையானது அமெரிக்க அரசியல் யாப்பின் முதலாவது அத்தியாயத்தில் முதல் நான்கு சரத்துக்களூடாகவும் இடமளிக்கப்படுகின்றது.

இச்சரத்துக்களின்படி - அமெரிக்காவினது சட்டமியற்றும் அதிகாரங்கள் அனைத்தும் காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால் - சட்டமியற்றும் அதிகாரத்தினைப் பெற்றுள்ள காங்கிரசுக்கு அதன் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறையானது மிகவும் வரையறுத்த, ஒடுங்கிய பாதையாகவே காணப்படுகின்றது. அதாவது - அமெரிக்கத் தேர்தல் நிறுவனமான தேர்தல் கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு மாநில சட்டச் சபைகளுக்குமுரிய இரண்டு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறு தெரிவுசெய்யப்படும் தேர்தல் கல்லூரி உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு வருடங்களாகும். எனவே, இந்த இரண்டு வருடகாலத்துக்குள் - உயர்குழாத்தினர் தமக்கேற்றவிதத்தில் அரசியல்வாதிகளை செயற்படத் தூண்டிவிடுவர். அவ்வாறு தூண்டிவிடுவதுடன் மட்டுமல்லாது தமக்கு சாதகமாக செயற்படுகின்றார்களா என்பதனையும் உயர்குழாத்தினர் இவ்விரண்டு வருடகாலத்துக்குள் உறுதி செயதுகொள்ளக்கூடியதாக இருக்கும்.


அவர்கள் இவ்வாறாகச் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் அடுத்த கட்ட நிதியுதவி கிடைக்காமல் போய்விடும். பிரதிநிதிக்கு மட்டுமல்ல, சில சமயங்களில் அவர் சார்ந்த கட்சிக்கும் கூடவே.

*(பிரதி செவ்வாய் தொடரும்)*





இந்தியாவின் அஸாம் மாநிலம் யானைகளுக்குப் பெயர்போனது. அங்கு நடைபெறும்'யானைத் திருவிழா' உள்ளூர் மக்களை மட்டுமல்ல, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளையும் கவர்ந்திழுக்கின்றது. இந்தத் திருவிழாவின் சில காட்சிகள் இவை.






# யானைத் திருவிழா

# வால் வெள்ளியைத் தேடி

## ஒரு வான் பயணம்



பழுதடைந்த ரொக்கெட்

வால் வெள்ளியைத் துரத்திச் சென்று ஆய்வினை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய விண்வெளி ஏஜன்ஸி **(European Space Agency - ESA)** உருவாக்கிவந்த திட்டம் - இன்னும் இரண்டரை வருடங்களுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

ரொசெற்றா **(Rosetta)** என்னும் விண்வெளிக்கலத்தினைப் பயன்படுத்தி - வால் வெள்ளியில் ஒரு ரோபோவைத் தரையிறக்குவதன் மூலம் ஆய்வினை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது.

ஆனால்- ரொசெற்றாவை எடுத்துச் செல்லும் ரொக்கெட்டின் தொழிற்பாட்டில் எழுந்த குறைபாடுகளைத் தொடர்ந்து இத்திட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இதுவரை இத்திட்டத்திற்காக 600 மில்லயன் ஸ்ரேலிங் பவுண்ஸ்கள் செலவிடப்பட்டிருந்தது. இத்திட்டம் தாமதமானதால் - இன்னும் 60 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸ் மேலதிகசெலவு ஏற்பட்டுள்ளது.



ரொசெற்றா விண்கலம்

தூசினையும், வாயுக்களையும் ஏராளமாகக் கக்கிக்கொண்டு வரும் வால்வெள்ளியையே- புதிதாக ஆராய்ச்சிக்குத் தேடுவதாக - இத்திட்டதின் தலைமை விஞ்ஞானி DR. ஹேர்கார்ட் ஷெவெம் கூறுகின்றார். விஞ்ஞானிகள் தம் பாஷையில், அதையே செயற்பாட்டுத் திறன் மிக்க வால்வெள்ளி என்கிறார்கள்.

அநேகமாக அடுத்தமாதத்திலிருந்து ஆய்விற்குத் தேவைப்படும் புதிய வால்வெள்ளியைத் தேடும் பணி ஆரம்பமாகிவிடுமென்றும் - சூரியன் மற்றும் வியாழன் ஆகிய கிரகங்களின் ஓடுபாதைகளுக்கு அருகே சுற்றிக் கொண்டிருக்கும் வால் வெள்ளிகளைக் கண்டுபிடித்தால், அவற்றைப் பூமியிலிருந்து அடைவது இலகுவாக இருக்கும் என்றும் DR.ஷெவெம் விபரிக்கின்றார்.

எது எப்படியோ - வண்ணாத்துப் பூச்சியைப் பிடிக்கும் நிலையிலிருந்து வால் வெள்ளியைப் பிடிக்கும் நிலைக்கு விஞ்ஞானம் முன்னேறியிருக்கிறது என்பது சுவாரசியம்தானே!



அரங்கம் 16




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்





சார்லிக்கும் ஜாக்கிக்கும் ஒருவரையொருவர் மிகவும் பிடித்து விட்டது.

சார்லி நயமாகப் பேசி, ஜாக்கியிடமிருந்து அருமையான நடிப்பை வெளிக்கொணர்ந்தார். நாடோடி மற்றும் சிறுவனின் அந்தக் கதை எல்லோருடைய இதயத்தையும் உருக்கி மாபெரும் வெற்றிப்படமாக அமைந்தது. அதன் விளைவாக ஐம்பது நாடுகளில் அது திரையிடப்பட்டது.

'த கிட்' சார்லியை மிகவும் பாதித்த இன்னொரு சமூகப் பிரச்சினையான, ஆதரவற்ற குழந்தைகள் நடத்தப்பட்ட நிலையினை அலசியது. அநாதை விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது ஏற்பட்ட பயத்தை இன்னும் அவர் மறக்கவில்லை. "தாய்மைதான் அவள் செய்த ஒரே பாவம்" என்ற வாசகங்களோடு முதல் காட்சியில் எடனா, தன் குழந்தையுடன் மருத்துவமனையை விட்டு வெளியேறுவது காட்டப்பட்டது.

தான் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன், அவள் அந்தக் குழந்தையை ஒரு ஆடம்பரக்காரின் பின்பகுதியில் விட்டுச் செல்கிறாள். அந்தக் குழந்தையைக் கண்டெடுப்பவருக்கு அதைப்பேணி, பாதுகாக்கக்கோரி ஒரு குறிப்பு விட்டுச்செல்கிறாள். அந்தக் கார் களவு போக, குழந்தை ஒரு சந்தின் முடுக்கில் வீசப்படுகிறது. அங்கே நாடோடி அதை கண்டு விருப்பமில்லாமல் பாதுகாவலனாகிறான். நாடோர்டிக்கு இப்போது எப்படி ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்வது என்பதைக் கற்க வேண்டியிருந்தது. வலைகளைப் பின்னி ஒரு தொட்டில் உருவாக்குவது, பழைய காப்பிக் கோப்பையிலிருந்து குழந்தைக்கு போத்தல் தயார்செய்வது.

ஜாக்கி கூகன் ஐந்து வயது சிறுவனாக படத்தில் தோன்றுகிறான். சார்லிக்கும், ஜாக்கிக்குமிடையே திரையில் நட்பு வளருவது, அவர்களிருவரின் தீவிரமான அன்பான உறவுக்கு வலுச்சேர்க்கிறது. அச்சிறுவனும், நாடோடியும் அடிமட்டத்திலிருந்து முன்னேறி சட்டம் பின தொடர தொழில் செய்வதை நகைச்சுவையு டன் காட்டுகிறார்கள்.

ஆனால்- அந்தச் சிறுவனின் தாய் தன குழந்தையை மறக்கவில்லை. தற்போது அவள புகழ்பெற்ற மேடைப் பாடகி. அவள் சிறுவனையும், நாடோடியையும் ஒரு சச்சரவில் சந்திக்கிறாள். ஆனால், அடையாளம் தெரிய வில்லை. சிறுவனின் உடல் நலம் பாதிக்கப்பட- முதலில் நாடோடி தானாகவே குணப்படுத்த முயன்று, பின்னால் மருத்து வரிம் அழைத்துச் செல்ல, எட்னா தன் மகனைத் தெரிந்துகொள்கிறாள்.

(அடுத்த அரங்கில் தொடரும்)

## திரை விமர்சனம்

# பாலா


திரைப்படங்கள் எதிர்நோக்கும் மிகப் பாரிய சவால் - நல்ல கதையம்சமுள்ள, தனித்துவமான படங்கள் அமைவதுதான்.



அந்தவகையில் - பாலா திரைப்படம் உங்களுக்கு ஏற்கனவே பார்த்த படங்களை ஞாபகமூட்டினால் கவலைப்படாதீர்கள். ஏனெனில், இதுவரை வந்த பல படங்களின் ஒட்டுமொத்தக் கதைதான் பாலா.

இரண்டு தாதாக்கள். ராஜன் பி.தேவிடம் வேலை செய்யும் ஷியாம் - மற்றொரு தாதாவான ரகுவரனின் மகள் ஜாஸ்மினிடம் மனதைப் பறிகொடுக்கிறார். ஆனால் ராஜன் பி.தேவ் - ரகுவரன் மோதலோ ஊரறிந்த கதை. பிறகென்ன- காதலர்கள் சேர்வதற்குப் பிரச்சினைகள் எழ - ஏற்கனவே சொன்னபடி பழைய கதைகளின் பாதையில் படமும் நகர்கின்றது.

ஏற்கனவே, 'ரன்' படத்தில் செய்த பாத்திரம் போலவே - பாலாவிலும் மீரா ஜாஸ்மினுக்கு பாத்திரம் வாய்த்துள்ளது. ரகுவரனின் மகளாக வரும் அவரின் சுறுசுறுப்பு - 'ரன்' னிலிருந்ததை விட எங்கே காணாமற்போனது...?



ஷியாம் - காதல் வயப்படும் காட்சிகளில் சோபிக்கிறார். ஆனால், அவர் ஏன் தாதாவாக வந்தார் என்பது எங்களுக்குத் தெரியாதது போலவே - இயக்குநருக்கும் தெரியாது போலும்.

முன்னரே எதிர்பார்த்த முடிவு - சுவாரசியத்தைத் தேடிப்பார்க்க வைக்கிறது. படத்தில் சொல்லக்கூடியது யுவன் சங்கர் ராஜாவின் இசைதான். 'பூப்பூவாய்' அழகான பாடல்.

மற்றும்படி - இன்றுவரும் தமிழ்த் திரைப்படங்கள் வரிசையில் - 'பாலா'வும் சந்தேகமில்லாமல் சாதாரணமாய் சேர்ந்துவிடுகிறது. இவ்வளவு செலவழித்துப் படம் எடுப்பவர்கள் - கதையைப் பற்றியே கவலைப்படாது படத்தை உருவாக்கியது துரதிஷ்டம்தான் - யாருக்கு என்கிறீர்களா? படத்தைப் பார்க்கும் எங்களுக்குத்தான்!

- துஷி

# மருந்து மட்டுமல்ல மருத்துவரின் உடையும் நோய் தீர்க்கும்



நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவரும் வைத்தியர்கள் - அழகான உடை அணிந்திருந்தால் - நோயாளர்கள் மிக இயல்பாக அவர்களுடன் ஒன்றிவிடுவார்கள் என்று சொல்கிறது அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி.

அவுஸ்திரேலியாவின் - நியூ லாம்ப்ரனினுள்ள, ஜோன் ஹன்ரர் வைத்தியசாலையில் **(John Hunter Hospital, New Lambton)** நடந்த ஆய்வில் - அழகான உடையணிந்து வைத்தியம் பார்த்த வைத்தியர்களால் - நோயாளிகளிடையே தன்னம்பிக்கையும், மகிழ்ச்சியும் ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

அங்கு பணியாற்றிய 12 வைத்தியர்கள் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். 1680 நோயாளர்களுக்கு நோய்தீர்க்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

நோயாளர்கள்,சிகிச்சை முடிந்து வைத்தியசாலையை விட்டுப்போகும்போது அளித்த பதிலால் - இப்போது அந்த வைத்தியசாலையில் உள்ள அனைத்து வைத்தியர்களுமே தங்கள் உடைகளை அழகானதாக தோன்றும்படி மாறிவிட்டார்களாம்.

# ஆண் குழந்தைகளால் தாய்மார் படும் அவலம்!

எங்களூர் 'நைன்ரிகள்' சொல்வதைத்தான் இப்போது விஞ்ஞான உலகமும் திருப்பிச் சொல்ல ஆரம்பித்திருக்கிறது.

அயலில் யாராவது பெண் பிரசவ வேதனையில் அதிகம் துன்பப்படுகின்றாள் என்றால் - 'பிறக்கப்போவது ஆண்தான்' என அவர்கள் அடித்துச் சொல்வதை நாம் கேட்டிருகிறோம்.



ஆனால் - இது மருத்துவ உலகில் இப்போது ஆராய்ச்சிகள் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

டப்ளின் தேசிய பிரசவ வைத்தியசாலையில் **(Dublin's National Maternity Hospital)** - 8000 பிரசவங்களில், அத்தனையும் முதற் பிரசவங்கள்- அவதானிப்பு நிகழ்த்தப்பட்டது.

இயற்கையாகவே வலி கண்டதும் பிறந்த தலா 4000 அண், பெண் குழந்தைகளின் தாய்மாரிடம் இந்த ஆய்வு செய்யப்பட்டது. இதன்போது- ஆண் பிள்ளைகளைப் பெற்றவர்களில் 249 சிசேரியன் பிறப்புக்களும், பெண் குழந்தைகளைப் பெற்றவர்களில் 170 சிசேரியன் பிறப்புக்களும் நிகழ்ந்தனவாம்.

அதேவேளை - ஆண் குழந்தைகளின் தலையில் அளவு, பெண் குழந்தைகளின் தலையின் அளவைவிட பெரிதாக இருந்ததாலும் ஆண் குழந்தைகளைப் பெற்ற தாய்மார் மிகச் சிரமப்பட்டார்களாம்.

இந்த ஆராய்ச்சி விடயம் **British Medical Journal** சஞ்சிகையிலும் முக்கியத்துவமளிக்கப்பட்டுப் பதிவாகியுள்ளது.

# படகினுள் ஏறிய அக்ரோபஸ்



ஜந்துவுடன் கொர்ஸோசன்

உலகைச் சுற்றிவரும் படகுப் பந்தயத்தில் **(World Jules Verne Trophy)** ஈடு பட்ட பிரான்ஸ் நாட்டு மாலுமிகள் சிலருக்கு அன்றைய தினம் வியப்பிற்குரிய நாளாக அமைந்தது.

பிரிட்டானி **(Brittany)** யிலிருந்து புறப்பட்ட சில மணி நேரங்களில், தமது படகில் இந்த அக்ரோபஸ் (எங்களூர்க் கணவாயின் பெருத்த வடிவம்...?) ஏறுவதைக் கண்டார் படகின் தலைமை மாலுமி ஒலிவர் டீ கொர்ஸோசன் **(Oliver De Kersauson)**.

இந்த ஜந்துவின் விஞ்ஞானப் பெயர் **Architeutis dux** என்பதுடன், இது 60 அடிவரை வளரக்கூடியது என்றும் இப்போது விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

இந்த ஜந்துவின் ஒவ்வொரு கையும் - தனது கால்களின் பருமனுக்குச் சமனாக இருந்ததாகவும் - தங்களிடமிருந்து பேனாக் கத்திகளால் அதனைக் கொன்றதாகவும் கொர்ஸோசன் தெரிவித்தார்..

# பிரச்சினைகளை எதிர் கொண்டு சேர்ந்து வாழ்வதே வாழ்க்கை

கணவனும், மனைவியும் வேறுபட்ட இருவராகும். ஒருவரைப்போல் எல்லாவற்றிலும் 100:100 வீதம் முழுமையாகச் சமமானவர் இவ்வுலகில் இல்லை. சில குணங்களில் இருவரும் சமமானவர்கள். மதம், பெறுமதி போன்றவை ஒன்றாக இருப்பினும் நிகழ்ச்சிகளில் கரு த்து வேறுபாடு ஏற்படலாம். வேறுபட்ட இருவர் ஒன்றாகச் சேர்ந்து வாழும்போது எப்படிப்பட்ட பிரச்சினைகள் வரும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஒருவர் உதவிகேட்டு, பிச்சைகேட்டு வீட்டுக்கு வரும்போது ஒருவர் உடனடியாக உதவவேண்டும் என எண் ணலாம். மற்றவர் வந்தவரைத் தேடிப் பார்த்து அவருக்கு என்ன குறை என்பதை விபரமாக அறிந்தபின் உதவ லாம் என எண்ணலாம்.

கோயிலுக்குச் செல்லும்போது மனிதரில் இறைவனைக்காண வேண்டுமென்று ஒருவர் கூறலாம். மற்றவர் கோயிலுக்குச் சென்று கடமைகளை முடிப்பதில் இறை வனைக் காணவேண்டும் எனக்கூறலாம். இங்கு மதம் பற்றி இருவரிடமும் உள்ள எண்ணமும் வித்தியாசமாக உள்ளது. இருவரும் ஒரே மதத்தவராக இருந்தாலும் எண்ணங்களில் மாற்றம் இருக்கலாம்.

ஒருவர் மற்றவரைப் புரியத் தன்னை அறியவேண்டும். எனது எண்ணம் எப்படிப்பட்டது. எனது மனதைக் கஷ்டப்படுத்தும் வேதனை, பயம், ஆசை, சந்தோஷம், எதிர்பார்ப்பு, பிரச்சினை என்ன என்பதைத்தான் அறிய வேண்டும். சுயஅறிவு ஒவ்வொருவருக்கும் தேவை. திட்டம் போடச் சிலருக்குப் பயம். ஒருவர் மற்றவரது எண்ணத்திலிருந்து வேறுபட்டவராக இருப்பார் என்பது புரிகிறதல்லவா? அதே போன்று இருவரும் வேறுபட்டவராக இருப்பதால் ஒருவர் மற்றவரை அறியவேண்டும். அதேபோன்று தன்னைப் பற்றியும் அறியவேண்டும்.

கணவன் மனைவி இருவரும் இருவேறுபட்ட இருவர் என்பதைப் புரியவேண்டும். ஆண், பெண் என்ற விதத்தில்



இருவரும் வேறுபட்டவர்கள். இதனால் இருவரும் வேறுபட்ட விதத்தில் நடமாடுவர். நிகழ்ச்சிகளில் செயற்படுவர்.

பெண்களை விட ஆண்களின் நடமாட்டம் பொதுவாக வேறுபட்டதாக இருக்கும். ஆண்கள் பெரும்பாலும் வீட்டுக்கு வெளியிலுள்ள செயற்பாட்டில் இறங்கவே விரும்புவர். வெளியே செல்ல ஆசைப்படுவர். எதற்கும் பயமில்லாதவாறு உள்ளாகுவர். ஆபத்திலும் சிக்குவர்.

பெண்கள் பெரும்பாலும் பெறுவதற்கு விரும்புவர். அன்பைப்பெற அதிகம் ஆசைப்படுவர். தமது வாழ்வில் உள்ளதைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புவர். இயற்கையாக இருப்பதைப் பாதுகாக்கப் பழக்கப்பட்டவர்கள். உயிரைத் தனது வயிற்றில் பாதுகாத்துப் பெற்றெடுப்பர். மேலும் சுயாதீனமாக இருக்க விரும்புவர். பயம், துக்கம் போன்ற உணர்வுகளை அதிகம் ஆண்களைவிட வெளிப் படுத்துவர். பாதுகாப்புணர்வைப் பெற, அன்பைப் பெற அதிகம் ஆசைப்படுவர்.

இவ்வாறு வேறுபட்ட சுபாவங்களைக்கொண்ட இருவர் ஒன்றாகச் செயற்படும்போது ஒருவர் மற்றவரை முழுமைப்படுத்துகின்றார். எல்லா ஆண்களிலும் பெண்களிலும் சுபாவமும் பெண்களில் ஆண்களின் சுபாவமும் உண்டு. ஆண்கள் சில குணங்களிலும் பெண்கள் சில குணங்களிலும் மேலோங்கி நிற்பர்.

இங்கே சிறிய பகுதி குணமாகும். இந்த சுபாவம் இரண்டும் சேரும்போது முழுமை பெறுகின்றோம். பெண்குணம் ஆணில் இருப்பதால் ஆணைப்புரிந்து கொள்ள முடிகின்றது. ஆண்குணம் பெண்ணில் இருபபதால் பெண்ணைப் புரிந்துகொள்ள முடிகின்றது. தம்மை முழுமையாக்க ஒவ்வொருவருக்குள்ளும் ஆசையுண்டு ஆகவே ஒருவர் மற்றவரை முழுமையாக்குகின்றனர்.

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது*
*இல்லை நிலக்குப் பொறை.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## பழைய பாதையில்...!

சமாதான முயற்சிகளில் இந்தியா கொண்டுள்ள 'அக்கறையும், நிலைப்பாடும்' மீண்டுமொருமுறை தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்திய வெளியுறவுச் சேவையில் சிரேஷ்ட அதிகாரியாக - வெளியுறவுச் செயலாளராகக் கடமையாற்றி, தற்போது இந்திய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை வகுப்பில் ஆலோசகராகவும் இருந்துவரும் யோகேந்திரநாத் டிக்ஸிற் - Gulf News சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் சமாதான முயற்சிகளை எப்படி இந்தியா பார்க்கின்றதென்பதை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அமைதி முயற்சிகளைப் பயன்படுத்தி, தமது தாயகப் பகுதிகளை கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப் புலிகள் திட்டமிட்டு வருவதாகவும், இது குறித்து - நோர்வே நாட்டவர்கள் கொஞ்சமாவது புரிந்துகொள்வார்கள் எனத் தான் நம்புவதாகவும் டிக்ஸிற் தெரிவித்திருக்கிறார்.

டிக்ஸிற்றின் இந்தக் கருத்துக்கள், அடிப்படையில் - விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கையீனத்தைத் தோற்றுவிக்கவேண்டும், அவர்களது அமைதியின்பாலான விசுவாசத்திற்கு மாசு கற்பித்துவிட வேண்டும் என்ற தெளிவான இலக்குகளைத் தெரிவிப்பதுடன் -

நோர்வே மேற்கொண்டுவரும் மத்தியஸ்த முயற்சியை, கேலியோடு விமர்சிக்கும் 'பிரபுத்துவ' பார்வையையும் அள்ளி வீசியிருக்கிறார்.

டிக்ஸிற்றின் இக்கருத்தானது - வெறுமனே தனியொரு இந்திய ராஜதந்திரியினது கருத்து என ஒதுக்கி வைத்துவிட முடியாததாகும்.

ஏனெனில் - இலங்கை விவகாரத்தில் நீண்டகாலப் பரிச்சயமுடைய, மிக முக்கிய துரோகத்தனங்களுக்கும் குழப்பங்களுக்கும் காரணமான டிக்ஸிற் - இந்திய வெளியுறவுச் சேவையில் இன்றும் ஆதிக்கம் செலுத்தி வரும் மிக முக்கிய நபர் என்பதோடு - இந்தியாவின் பார்ப்பனீய அதிகாரவர்க்கத்தினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் பிரதிநிதியாகவும் இனங்காணப்படக் கூடியவரேயாவார்.

இந்தவகையில் - இந்தியா அமைதி முயற்சிகளை எவ்வாறு நோக்குகின்றது, அதனது இலக்கு என்ன என்பது - டிக்ஸிற்றின் கருத்துக்களினூடாக உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

அமைதி முயற்சிகளில் ஆரம்பம் முதலே சந்தேகத்துடனும், ஒதுங்கியிருப்பதாகக் காட்டிக்கொண்டே உள்ளூர ஏராளம் அரசியல் நகர்வுகளுடனும் செயற்பட்டுவந்த இந்தியத் தரப்பு - தனது அடுத்த கட்ட நடவடிக்கையை - மத்தியஸ்தம் வழியேயும், அரசியல், பொருளாதார ஆதரவு ரீதியாகவும் அமைதிச் சூழலை வளர்த்தெடுக்க முயற்சிக்கும் நாடுகளின் மீது விஸ்தரித்துள்ளது.

நோர்வே தனது நிலைப்பாட்டில் உறுதியாகவும், விமர்சனங்கள் - எதிர்ப்புக்களைக் கடந்த நிலையிலும் தனது பணிகளைத் தொடர்ந்து வரும்போது -

அமைதி முயற்சிகளில் தன்னார்வத்தோடு முக்கிய பங்களிக்க முயலும் ஜப்பானின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க இந்தியா முயன்றது.

இந்தவகையில் - புதுடெல்கிக்குச் சென்றிருந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷியைச் சந்தித்த - இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ரா - இலங்கை விவகாரத்தில் ஜப்பான் உதவுவதை இந்தியா விரும்பவில்லை என்பதை நேரடியாகவே வலியுறுத்தியிருந்தார்.

இதனைக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மறுத்தபோதும் - கொழும்பு வந்த அகாஷி செய்தியாளர்களிடம் பேசும்போது, இந்தியா தன்னிடம் அழுத்திச் சொன்னதை பகிரங்கமாகவே வெளியிட்டதுடன் - இலங்கையின் சமாதான முயற்சியில் தலையிடவேண்டாம் என இந்தியா ஒருபோதும் தமக்கு வேண்டுகோள் விடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்தவகையில் - ஜப்பானையும் கட்டுப்படுத்த முயன்ற இந்தியாவின் முயற்சிகள், அது நினைத்தது போல வெற்றியளிக்கவில்லை என்றே கூறலாம்.

இருந்தபோதும் - தனது தலையீடுகளையும், விசமத்தனமான பிரசாரத்தையும் இந்தியா இத்துடன் கைவிடுவதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே - இலங்கையுடன் தான் பெற்ற அனுபவங்களை மறக்க முடியாதிருந்தும் - இந்தியாவின் ஆதிக்க மனப்பாங்கும், இலங்கை விவகாரத்திற்குத் தீர்வொன்று ஏற்படாமல் தக்கவைத்து - அரசியல் ஆதாயம் தேடும் அப்பட்டமான சுயநலமும், மீண்டுமொருமுறை டிக்ஸிற் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருப்பதை தமிழ்மக்கள் எச்சரிக்கையுடன் உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

# ஒரு நாட்டுக்குரிய அமைப்பை பிரபாகரன் கட்டியெழுப்பி வருகிறார்

## 'வொஷிங்ரன் போஸ்ட்' செய்தியாளர் கருத்து

இலங்கைக்குள் இன்னொரு நாட்டை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வியப்புக்குரிய வகையில் கட்டியெழுப்பி வருவதாக 'வொஷிங்ரன் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

'வொஷிங்ரன் போஸ்ட்' நிருபர் ஜோன் லான் காஸ்ரர் இங்குள்ள நிலமையை அவதானித்துவிட்டு எழுதியுள்ள கட்டுரையிலேயே இது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் சுயாட்சித் தீர்வு ஒன்றை முன் வைத்துள்ளனர். ஆனால் சுயாட்சியை நடைமுறைப்படுத்தும் கட்டமைப்புக்களைப் பிரபாகரன் ஏற்கனவே உருவாக்கியிருக்கின்றார்.

பொலிஸ், நீதித்துறை, சட்டக்கல்லூரி, சிறைச்சாலை, மோட்டார் வாகனப் பதிவு, வரி, சுங்கம், சுகாதாரப் பகுதி இவற்றுடன் காட்டிலாகாவையும் புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள்.

புலிகள் 1990இல் சிவில் நிர்வாகத்தை நடத்தத் தொடங்கிய பின்னர், 1993இல் சட்டக் கல்லூரியை ஆரம்பித்தார்கள். இதன் மூலம் புலிகள் தமது பகுதிகளில் சட்டங்களை அமுலாக்கும் அதிகாரங்களைக் பெற்றுள் ளார்கள் எனவும் 'வொஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# மூன்று மாவட்டங்களில் வேகமாகப் பரவும் டெங்கு!

புத்தளம், மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் டெங்குக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவிவருவதாகச் சுகாதார அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இதுவரை புத்தளத்தில் 9 பேரும், மாத்தளையில் 5 பேரும், பதுளையில் ஒருவருமாக மொத்தம் 15 பேர் டெங்குக் காய்ச்சலுக்குப் பலியாகியுள்ளனர்.

இவர்களைவிட மேலும் பெருமளவானோர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சைகள் பெற்றுவருகின்றனர். புத்தளம் பகுதியில் கடந்த 45 நாட்களில் 110 பேர் டெங்குக் காய்ச்சலுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ராகம, கொழும்பு வைத்தியசாலைகளுக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றனர்.

# சமிக்ஞை கிடைக்காத கைத் தொலைபேசிகள்

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் தெளிவாக இயங்குமெனத் தற்போது கையடக்கத் தொலைபேசிகள் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால், குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் இத்தொலைபேசிக்குரிய சமிக்ஞை கிடைப்பதில்லை எனப் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

வடமராட்சி தென்மராட்சிப்பகுதிகளைச் சேர்ந்த கைத் தொலைபேசி பாவனையாளர்களே இவ்வாறு ஏமாற்றமடைந்துள்ளனர். (09)

# 262 பௌத்த வழிபாட்டுத் தலங்களை புனரமைப்பதற்கு இந்தியாவிடம் உதவி

## இந்தியத் தூதுவரிடம் தியவதனநிலமே கோரிக்கை

வட-கிழக்குப் பகுதிகளில் 262 பௌத்த வழிபாட்டுத் தலங்கள் யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவற்றை மீளத் திருத்தியமைக்க இந்திய அரசாங்கம் உதவவேண்டும் என்றும், கண்டி தலதாமாளிகையின் தியவதனநிலமே நிரஞ்சன் விஜேரட்ண, இந்தியத் தூதுவர் நிருபம் சென்னிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தலதா மாளிகைக்கு இந்திய தூதுவர் நிருபம் சென் விஜயம் செய்தபோதே அவரிடம் இக்கோரிக்கை நேரடியாக விடுக்கப்பட்டது. (01)

# விடுதலைப் புலிகளுக்கு தாய்லாந்தில் அலுவலகம்

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்கொக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாங்கொக் நகரில் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான உத்தியோகபூர்வ அனுமதி எதையும் புலிகள் இதுவரை தாய்லாந்து அரசிடம் கோரவில்லை. எனினும் உத்தியோகப் பற்றற்ற வகையில் இது தொடர்பான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'இலங்கையை மீளப் பெறுதல்' என்ற தொனிப்பொருளில் ரோக்கியோ மாநாடு

## ஜப்பானியத் தூதுவர் யசுஷி அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜூன் மாத நடுப்பகுதியில் ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் பிரதான கருப்பொருளாக 'இலங்கையை மீளப்பெறுதல்' என்ற விடயம் அமையும் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையிலேயே உதவி வழங்கும் நாடுகள் உலகவங்கி ஊடாக நிதியுதவிகளை வழங்கும்.

ரோக்கியோ மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தைத் தயாரிக்கும் பணிக்கு இலங்கைக்கான தமது விஜயம் பெரும் உதவியாக அமைந்திருப்பதாகவும் யசுஷி அகாஷி மேலும் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் பொருளாதாரத்துறையை மேம்படுத்திக் கொள்வதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் கூடிய பங்கினை வகிக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்த யசுஷி அகாஷி,

இலங்கைக்கான நிதியுதவி தேவைகள் மதிப்பட்டு அறிக்கையை உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் ஆகியன இணைந்து உருவாக்கும் என்றும் -

இந்தத் தேவைகள் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரிக்கும் பணி எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் முடிவடையும் என்றும், ஜப்பானிய விசேட தூதர் யசுஷி அகாஷி மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் நிறுவனத்திடம் பஸ்கள்; தடுக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை!

(கொழும்பு)

பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ஜோன் மேயரின எஸ்.பி.எஸ். நிறுவனத்திற்கு ஆறு பஸ் நிறுவனங்களை வழங்குவதை ஜனாதிபதி சந்திரிகா தடுத்து நிறுத்த வேண்டும் என்று, லங்கம ஒருங்கிணைந்த முன்னணி என்ற தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆறு போக்குவரத்துச்சபை நிறுவனங்களை உத்தியோகபூர்வமாக எஸ்.பி.எஸ். நிறுவனம் பெறுப்பேறகவுள்ளது. இதைத் தடுத்து நிறுத்துமாறு கோரியே ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவசரவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் 39 சதவீத முகாமைத்துவப் பங்குகளைக் கொள்வனவு செய்திருந்தபோதும் 5 சதவீதமான பணத்தையே அரசாங்கத்துக்கு செலுத்தியுள்ளது. இன்னமும் 800 மில்லியன் ரூபா செலுத்தப்படாத நிலையில் பிரித்தானிய நிறுவனத்துக்கு பஸ் நிறுவனங்களை கையளிப்பது அபாயகரமானது என்றும், இதைத் தடுத்து நிறுத்துமாறும் அத்தொழிற்சங்கம் மேலும் கோரியுள்ளது.

## மாமுனை அ.த.க.வித்தியாலயத்தை

# தரமுயர்த்தி, நிரந்தர கட்டடம் அமைத்துத்தரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மாமுனை அ.த.க. வித்தியாலயத்திற்குப் புதிய நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறும், இப்பாடசாலையின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் கல்வித் திணைக்களத்திடம் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் எட்டாம் ஆண்டுவரை இயங்கிய இப்பாடசாலை தற்போது ஐந்தாம் ஆண்டுவரையுமே இயங்கி வருகின்றது. கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது இப் பாடசாலைத் தற்காலிகக் கொட்டகை முற்றாக எரிந்து நாசமாகிப் போயுள்ளதுடன் நிரந்தரக் கட்டடமும் பாரிய சேதத்திற்குள்ளாகியுள்ளது.

ஆனால் கட்டடத்தைப் புனரமைக்கவோ, பாடசாலையின தரத்தைக் கூட்டவோ கல்வித் திணைக்கள அதிகாரிகள் முன்வராததால் இப்பகுதி மாணவரின் கல்விக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (09)

# ஒன்றரை இலட்சம் தென்னைகள் குடாநாட்டில் யுத்தத்தால் அழிவு

## 15 ஆயிரம் மரங்களே மீள் நடுகை

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான தென்னைமரங்கள் அழிக்கப்பட்டிருப்பதாகத் தெங்கு அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் - குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பெருமளவு தென்னந்தோட்டங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இயக்கச்சி, பளை, எழுதுமட்டுவாள், மிருசுவில், சாவகச்சேரி, மட்டுவில், நுணாவில் பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்களிலேயே அதிகளவிலான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

யுத்த நடவடிக்கைகளுக்காகப் படையினரால் வெட்டப்பட்டதாலும், பல்குழல் பீரங்கித் தாக்குதல்களாலும் தென்னை மரங்களுக்கு இந்த அழிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இவற்றுக்குப் பதிலாகப் புதிய தென்னைமர நாற்றுக்களை நடுகை செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றபோதும், 15 ஆயிரம் வரையிலான புதிய தென்னங்கன்றுகளே மீள் நடுகை செய்யப்பட்டிருப்பதாகத் தெங்கு அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குடாநாட்டில் பெருமளவு தென்னைமரங்கள் அழிக்கப்பட்டிருப்பதால், பெருமளவு வருமானம் இழக்கப்பட்டிருப்பதுடன் சுற்றுப்புறச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### 300 விவசாயக் குடும்பங்களுக்கு உதவி

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலர்பிரிவில் மீளக்குடியமர்ந்த 300 விவசாய குடும்பங்களுக்கு 20 இலட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்களும் விவசாய முயற்சிக்குத் தேவையான விதைபொருட்களும் வழங்கப்படவுள்ளன. (34)

# தையல் போதனாசிரியர் இன்மையால் நெடுந்தீவில் கைவிடப்பட்ட பயிற்சி

(நெடுந்தீவு)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினரால, பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடாத்தப்படும் தையல் டிப்ளோமாப் பயிற்சி வகுப்புக்கள் கடந்த ஆண்டு தொடக்கம் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவில்லை.

நெடுந்தீவு- குடாநாட்டிலிருந்து தொலைவில் இருப்பதனால் அங்குள்ள யுவதிகள், யாழ்.நகருக்கு வந்து தொழிற்பயிற்சிகளை மேற்கொள்ள முடியாதநிலை இருப்பதனால், இவ்வருடமும் தமக்கான தையற்பயிற்சி நெறிகள் நடாத்தப்படாமல் கைவிடப்பட்டுவிடுமோ என்ற ஏக்கத்துடன் உள்ளனர்.

முன்னர் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றிய தையல் போதனாசிரியை ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்துப் புதிதாக எவரையும் இதுவரை நியமிக்கப்படாமையினாலேயே தையல் பயிற்சிகள் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மந்திகை மருத்துவமனைக்கு ஜப்பானிய மகப்பேற்று நிபுணர்

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் மகப்பேற்று நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்தனர். எம்.எஸ்.எவ்.குழுவைச் சேர்ந்த டாக்டர் மறிக்கோ என்னும் மகப்பேற்று நிபுணர் ஜப்பானிலிருந்து இங்கு வந்துள்ளார். இவர் தமது கடமையை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனால், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவந்த மகப்பேற்று நோயாளர்களுக்கான சகல சத்திரசிகிச்சைகளும் இங்கு நடைபெறுமென மந்திகை ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# அரச ஊழியர் மருத்துவச் செலவு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கும்

## கடந்த டிசம்பர் வரையான இழப்பீடே ஏற்கப்படும்

அரசாங்க ஊழியர்களின் அக்ரஹாரா காப்புறுதித்திட்டத்தின் கீழ் வெளிவாரிச் சிகிச்சைகள், மூக்குக் கண்ணாடி போன்றவற்றுக்குரிய செலவினை மீளளிப்பதற்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த இணக்கம் தொடர்பான சுற்றுநிருபம், அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் டிட்டா விமலசிறியினால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வெளிவாரிச் சிகிச்சை, மூக்குக் கண்ணாடி போன்றவற்றுக்கு இழப்பீடு வழங்கப்படுவது கடந்த ஆண்டு ஏப்ரல் 01ஆம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், தற்போது இது 2002 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதியில் வெளிவாரிச் சிகிச்சை, மூக்குக் கணணாடி போன்றவற்றுக்காக அரச ஊழியர்களுக்கும் இழப்பீடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (100)

## படையினரால் வீடுகள் விடுவிக்கப்பட்டபோதும்

# காவலரண்கள் அகற்றப்படாததால் அச்செழுவில் மீளக்குடியமர அச்சம்!

(ஊரெழு)

அச்செழுப்பகுதியில் படையினர் முகாமிட்டிருந்த பத்து வீடுகள் தைப்பொங்கல் தினத்தன்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோதிலும், அங்கு மீளக்குடியமர பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இங்கு படையினர் நிலை கொண்டிருந்தபோது, படையினர் தற் காப்புக்காக மண் அணைகள், காவலரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளை அமைத்திருந்ததுடன், சுற்றிவர முட்கம்பி வேலியையும் அமைத்திருந்தனர்.

இவை படையினரால் இன்னமும் அகற்றப்படாதுள்ளதுடன், பொதுமக்கள் பாவனைக்காகப் பிரதான வீதியைத் திறந்துவிடாமல் படையினர் மூடிவைத்திருப்பதாலும் - தொடர்ந்தும் ஆறு வீடுகளில் படையினர் முகாம் அமைத்திருப்பதாலுமே படையினரால் விடுவிக்கப்பட்ட வீடுகளில் பொதுமக்கள் மீளக்குடியமர அஞ்சுகின்றனர்.

# புதிய கல்விச்சீர்திருத்த கட்டமைப்பில் வலுப்பெறும் "ஆலோசனையும் வழிகாட்டலும்" என்ற எண்ணக்கரு

நேற்றைய தொடர்ச்சி............

## கல்வியின் பல்வேறு நிலைகளில் வழிகாட்டல் செயற்பாடுகள்

| கல்வியின் நிலைகள் | ஆரம்பம், நடுத்தரம் நிலை | இரண்டாம் | சிரேஷ்ட (2ஆம்) நிலை |
|---|---|---|---|
| நோக்கு | அபிவிருத்தி சார்ந்தவை, தடுப்புவகையானவை | தடுப்புவகையானவை | பரிகாரமான செயற்பாடு |
| நோக்கங்கள் | சுயவிழிப்புணர்வு, தொழில் விழிப்புணர்வு | சுயபுரிந்துணர்வு தொழில் பற்றிய ஆராய்ச்சி | சுய அடையாளம், தொழில உடன் அடையாளம் காணல் |
| விளைவுகள் | ஆரம்பத்தகுதிகள், மனப்பாங்கு, திறமை, விழுமியங்கள் | தனிப்பட்ட தொழில் சார்ந்த விருப்புக்களையும் இலக்குகளையும் இனங்காணல் | தன்னைப் பற்றியது, தொழில் சார்பான தீர்மானங்கள் |

ஆரம்பகட்டத்தின் முதற் பருவமானது பண்புகளை உருவாக்கும் காலமாகும். இக்காலப்பகுதியில் திறமைகளையும், மனப்பாங்குக்ளையும் விருத்திசெய்து ஆரம்ப அபிவிருத்திப் பணிகளைச் சமாளிக்க மாணவர்களுக்கு உதவும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.


பிற்காலத்தில் அபிவிருத்திப் பணிகளை வெற்றியுடன் கையாளுவதற்கான அத்திவாரம் இடப்படுகின்றது. நடுப்பகுதி மற்றும் இரண்டாம் நிலையில் பாடசாலை வருடங்கள் உடல், உள விருத்தியை குறிப்பதாக அமைகின்றது. ஆரம்பநிலைகளில் வழங்கப்படும் ஆலோசனை வழங்கலும், வழிகாட்டலும் மாணவர் தம்மைப் பற்றிய சுய விழிப்புணர்வு மற்றும் தொழில் சம்பந்தமான பணிகள் பற்றிய அறிவுபெற உதவுகின்றது. தம்மையும் வேலையுலகையும் ஆராய்வதால் தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும், பிரச்சினை தீர்க்கும் ஆற்றலையும் பெறமுடிகின்றது எனக் குறிப்பிடமுடியும்.

***ஆரம்பக் கல்விக் கட்டமைப்புக்கான ஆலோசனை வழிகாட்டல் எண்ணக்கரு***

- வீட்டில் இருந்து பாடசாலைக்குப் பொருத்தமடையச் செய்தல்.
- ஆசிரியர்- கற்போர் உறவு வலுவடைதல்.
- ஒரு நேரிடையான எண்ணக்கரு விருத்தியடைதல்.
- அடிப்படை கற்கையில் ஆற்றல்கள், குறைபாடுகளை இனங்கண்டு கொள்ளுதல்.
- பாடசாலையில் இருந்து இடைவிலகக்கூடிய மாணவர்களைப் பாடசாலைச் சமூகத்துடன் தொடர்ந்து உறவுகொள்ள வைத்தல்.
- நடத்தைப் பிரச்சினைகளுடைய பிள்ளைகளை இனங்காணலும் உதவி வழங்குதலும்.
- வேலையுலகு தொடர்பான யதார்த்த எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்தல்.

***ஆலோசனை வழிகாட்டற் சேவை சாதகமாக அமைய வேண்டிய காரணிகள்***

❖ பாடசாலை அதிபர் மற்றும்



ஆசிரியரிடம் இருந்து ஒத்துழைப்பு.

❖ நடுத்தர அளவிலான சுதந்திர அறை, ஒரு மேசை, சில கதிரைகள், அலுமாரி, காட்சிப்படுத்தல் றாக்கைகள் அல்லது பாடசாலை நூலகத்தின் அமைதியான பகுதி.

❖ உளவியல் பரிசோதனைப் பொருட்கள், தொழில்சார் துண்டுப் பிரசுரம், எழுது பொருட்கள் போன்ற வளங்கள்.

❖ பாடசாலை நேரசூசியில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை மேற்கொள்ள நேரம் ஒதுக்குதல்.

❖ ஆலோசகர் வழிகாட்டற்பணியில் முழுஈடுபாடு கொள்வதை உறுதிசெய்யும் வகையில் கற்பித்தல், மேற்பார்வை, கட்டணச்சேகரிப்புப் பணியிலிருந்து விலக்களித்தல்.

❖ ஒழுங்கான பாட ஆசிரியர் ஒருவரை வழிகாட்டல் ஆசிரியராக பயிற்றுவிப்பதால், வழிகாட்டறபணியை மேற்கொள்வதற்காக இவரின் கற்பித்தலில் இருந்து சிறிதளவு சுமை குறைக்கப்படுகின்றது.

❖ வழிகாட்டுநருக்கான கொடுப்பனவு திருப்தியாக அமைதல்.

❖ பெற்றோர், ஆசிரியர் சங்கத்தில் ஆலோசகரை ஒரு செயற்குழு அங்கத்தவராகச் சேர்த்து, பெற்றோரினதும் ஆசிரியரினதும் ஒத்துழைப்பைப் பெறச்செய்தல்.

❖ பாடசாலை வழிகாட்டல் பகுதிக்கு அல்லது நூலகத்திற்கு வழிகாட்டல் பற்றிய பிரசுரங்கள் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தல்.

❖ மாணவரின் அடைவுத் தகவல், ஏனைய செயற்பாடுகள் பற்றிய பதிவுகளை ஆலோசகர் பார்வையிட வகைசெய்தல்.

❖ சமூகச்சூழலில் இடம்பெறும் பல்வேறு புதிய மாற்றங்களை உள்வாங்குபவராகவும், சமூக வளங்களைப் பயன்படுத்துபவராகவும், சமூக உறவைக் கட்டியெழுப்பவும் வாய்ப்புக் கொடுத்தல்.

இத்தன்மைகளின் அடிப்படைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை சமகாலத்தில் பயன்படும் என்பதையும், விரைவில் அமுலாக்கப்படும் இச்செயற்திட்டம் சிறப்பாக ஒழுங்கமைக்கவும், ஆலோசகர் ஓர் கட்டமைப்பில் செயற்படவும், இக்கருத்தியல்கள் ஓரளவு உதவும் என்ற நம்பிக்கையுடனும் ஆலோசனை வழிகாட்டல் சேவையின் பிரதிபலிப்பு, அதன் சாதகத்தன்மைகளைக் கால நீட்சியில்தான் நாம் உணரமுடியும் எனக்கூறலாம்.

**ப. இராஜேஸ்வரன்,**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.**

### பருத்தித்துறையில் திருத்தப்படாத வீதிகள்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை 2 ஆம், 4 ஆம் குறுக்குத்தெருக்கள் பலவருட காலமாகத் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் போக்குவரத்துச் செய்யும் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இவ்விருபாதைகளும் பருத்தித்துறையின் முக்கியமான மீன்பிடித்துறையான முனை மீன்பிடித்துறைக்குச் செல்லும் பாதைகளாகும். இம்மீன்பிடித்துறையில் 500 இற்கு மேற்பட்ட வள்ளங்கள் தொழில் செய்வதால் ஏராளமான மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

இப்பாதையால் சைக்கிள் வியாபாரிகள், வாகன வியாபாரிகள், ஐஸ் கொண்டுசெல்லும் வியாபாரிகள் மிகவும் சிரமமடைகின்றனர். இப்பாதையால் போக்குவரத்துச் செய்யும் மக்கள், பாதையைத் திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

### மகோற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு மேற்கு அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

### வடமராட்சி கிழக்கில் பழமரக்கன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக்குடியமரும் மக்களிற்கு சர்வோதய நிறுவனம் பழமரக்கன்றுகளை இலவசமாக விநியோகித்து வருகின்றது.

இப்பழமரக்கன்றுகள் விநியோகம் மானியங்களை மற்றும் செம்பியன்பற்று தெற்குப் பகுதி மக்களிற்கு விநியோகிக்கப்படுகின்றன. (9)

# மாகாண சபையின் கீழுள்ள ஊழியர்கள் மீண்டும் அரசசேவையில் இணையலாம்

அரசாங்க சேவைகளில் இருந்து மாகாண சபைகளில் சேர்ந்த அரச ஊழியர்கள், அதிகாரிகள் மீண்டும் அரசாங்க சேவையில் சேர்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

இது சம்பந்தமான தடைகளை நீக்கி, அவர்களை இணைந்த சேவையில் சேர்த்துக் கொள்ள அரசாங்க பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

மாகாண சபையில் சேர்ந்த அதிகாரிகள் ஊழியர்களின் நீண்ட காலக் கோரிக்கைக்கிணங்க இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தனா தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டபோது 2லட்சத்துக்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் அந்த சேவையில் இணைந்து கொண்டார்கள்.

புதிய திட்டத்துக்கமைய முதற் கட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்களில் அங்கீககரிக்கப்பட்ட ஊழியர் சபையில் கடமையாற்றாத மாகாண சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மீண்டும் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என அறிய வருகிறது.

## சுன்னாகம் குடும்பஸ்தர் மிதிவெடியில் காயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி வெடித்ததில் நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த வ.கந்தசாமி (வயது - 50) என்னும் நபரே இவ்வாறு காயமடைந்து நேற்று மாலை 3 மணியளவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(ரா,60)

# அரசமைப்பைத் திருத்தாமலே தேசியகீதத்தை மாற்றலாம்

## கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

அரசியலமைப்பில் மாற்றம் எதுவும் செய்யப்படாமலேயே தேசிய கீதத்தை மாற்றலாம் என மனித வள, கல்வி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குத் தெரிவித்திருக் கிறார்.

தேசியகீதத்தை யாரும் பாடலாம். இதற்கு அனைவருக்கு மே உரிமை உள்ளது. இது அடிப்படை மனித உரிமை. இதற்கு அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவரத் தேவையில்லை என அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்திருக்கிறார்.

# பிரிந்து சென்றோரை மீள இணைய ஹக்கீம் அழைப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிச்சென்றோர் மீண்டும்வந்து இணைந்துகொள்வதற்கு இறுதி அழைப்பு விடுத்திருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

சமாதானப் பேச்சுக்களில் தனியான முஸ்லிம் பிரதிநிதிகள் பங்குபற்றவேண்டும் என்ற பொதுநோக்கத்துக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதற்காக பிரிந்து சென்றவர்கள் அனைவரும் மீள இணைந்து கொள்ளவேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் குறித்து கிழக்கு மாகாணத்தில் பலர் தவறான கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால், இவற்றையெல்லாம் மீறி முஸ்லிம் காங்கிரஸ் பலம் பெற்றிருக்கிறது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## திட்டமிடல் பணிப்பாளராக சுந்தரம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் திட்டப் பணிப்பாளராக பு.சுந்தரம்பிள்ளை இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலராக இருந்த இவர், கடந்தவருடம் ஓய்வு பெற்றிருந்தார்.

(ச,கி)

# தபாற்சேவை சங்க உத்தியோகத்தருக்கு இரண்டு நாள் கருத்தரங்கு நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தபால், தொலைத்தொடர்பு சேவை சங்க வடபிரதேசக்கிளை அங்கத்தவர்களுக்கான இருநாள் கருத்தரங்கு இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தபால், தொலைத்தொடர்பு சேவை சங்கத்தின் பொருளாளர் வ.விவேகானந்தலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்றைய ஆரம்பநாள் நிகழ்வில் வடபிராந்திய அஞ்சல் மா அதிபர் என்.ஜெயரட்ணம், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம், வவுனியா அஞ்சல் அத்தியட்சகர் வி.குமரகுரு, பிராந்திய நிர்வாக அலுவலர் எஸ்.மார்க்கண்டன், பிரதம அஞ்சல் அதிபர் எஸ்.பி.இராசதுரை ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நாளை, 'வாடிக்கையாளரின் திருப்தியே தபால் சேவையின் வளர்ச்சி' என்ற தலைப்பில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கமும்,

'ஒழுக்காற்று நடவடிக்கையும் உத்தியோகத்தர்களும்' என்ற தலைப்பில் வடபிராந்திய அஞ்சல் மா அதிபர் என் ஜெயரட்ணமும்,

'அரச சேவையின் முன்னேற்றமும் முகாமைத்துவத்தின் அவசியமும்' என்ற தலைப்பில் கலாநிதி குணராசாவும்,

'தொழிற்சங்கமும் அங்கத்தவர்களும்' என்ற தலைப்பில் தபாற் சங்கத்தின் பத்திராதிபர் எ.எல்.உதுமாலெப்பை ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

(ச,கி)

# தேசியமட்டப் போட்டிகளை நடத்துவது குறித்து ஆராய்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யாழ்.வருகை!

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

அமைச்சின் செயலாளர் என்.ஜி. புஞ்சிகேவ, பணிப்பாளர் மில்டன் அமரசிங்க மற்றும் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவினரே யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுவரும் இவர்கள், இம்முறை தேசிய மட்ட விளையாட்டுப் ,போட்டியினை யாழ்ப் பாணத்தில் நடாத்துவதற்கான நிலைமைகளை ஆராயவுள்ளனர்.

நாளை குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு விஜயம்செய்து அங்குள்ள மைதானங்களைப் பார்வையிடுவதுடன் போட்டிக்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

மறுநாள் வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலிலும் இவர்கள் பங்குபற்றுவர்.

இச்சந்திப்பில் திணைக்களத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.செயலகம் அழைப்புவிடுத்துள்ளது. (ச,கி)

## மேலும் பல சர்வதேச பாடசாலைகள் இலங்கையிலும்

டெல்லி பப்ளிக் ஸ்கூல் சொசைற்றி இலங்கையிலும் சர்வதேச பாடசாலைகளை நிறுவவுள்ளது.

இவ்வமைப்பு ஏற்கனவே கட்டார், சவூதி, குவைத், சார்ஜா, மஸ்கட் போன்ற பல மத்தியகிழக்கு நாடுகளிலும் சர்வதேசப் பாடசாலைகளை நடத்தி வருகின்றது.

## வெளிவிவகாரசேவையில் மீண்டும் ஜெயந்த தனபால

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார சேவையில் நீண்டகாலம் பணியாற்றி, பின்னர் ஒதுங்கியிருந்த ஜெயந்த தனபால மீண்டும் கொழும்புக்கு வந்து சேவையில் இணைந்து கொள்ளவுள்ளார்.

இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக வெளிவிவகார சேவையில் இருந்து ஒதுங்கி நியூயோர்க்கில் தங்கியிருந்தார்.

26-01-2003
ஞாயிற்றுக்கிழமை

யாழ் பல்கலைக்கழக
கைலாசபதி கலையரங்கில்

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்



ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்

வாரும் பாரும் காணும்
பாரும் காணும் தேடும்

ஆராயும் நீர் பாரும் ஆராரோ தேடும்
ஆராரோ ஆரிவரோ அவர் எவரோ பாரும்
முருகையன்

ஊடக அனுசரணை
நமது ஈழநாடு

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

ஒன்பதாவது அகவையில்.



பெயர் : றிச்சேட் றிச்மன்
முகவரி: ஜேர்மனி

முதலாவது அகவையில்.



பெயர் : சே.அபிஷாகர்
முகவரி: வீரபத்திரர் கோவிலடி, உடுப்பிட்டி.

இரண்டாவது அகவையில்.



பெயர் : ம.ஹரிஸ்
முகவரி: 17/24, நாவலடி வீதி, வண்ணார்பண்ணை.

பத்தாவது அகவையில்.



பெயர் : ஸ்ரீ.தருசன்
முகவரி: புத்தூர் மேற்கு, புத்தூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------------

முகவரி:---------------------------------------

பிறந்த ஆண்டு:---------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

-----------------------------
பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யுத்தப் பாதிப்புக்களைப் பாராமல் கொழும்பு திரும்பிய மகிந்த குழு!

## யாழ். ராணுவத் தளபதியால் மாற்றப்பட்ட நிகழ்ச்சிநிரல்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் குழுவினரும் - யுத்தத்தால் சேதமாக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதிகளையும், நெடுந்தீவுக்கும் சென்று அங்குள்ள மக்களையும் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், யாழ்.பிராந்திய இராணுவத் தளபதியினால் அவர்களுடைய திட்டம் மாற்றப்பட்டு, அப்பிரதேசங்களுக்குச் செல்லாமலேயே அவர்கள் கொழும்புக்குப் புறப்பட்டனர்.

அதேவேளை - குருநகர் பகுதிக்குச் சென்றபோது, அங்குள்ள மக்கள் கடும் சினத்துடன் மகிந்த ராஜபக்ஷ குழுவினருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

முன்னதாக - யாழ்ப்பாணம் வருகைதந்த இவர்கள், குருகுல பாடசாலையைத் திறந்துவைத்தனர். பின்னர் நண்பகல் 2.30 மணியளவில் அமைச்சர் மகேஸ்வரன் தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான பௌசி, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே உட்பட சில பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தென்பகுதிப் பத்திரிகையாளர்களும் யாழ். படைகளின் தளபதி சரத் பொன்சேகாவும் குருநகர் பாதுகாப்பு வலயம் நோக்கிச் சென்றனர்.

குருநகர் சென்ற இவர்கள் மீது, குருநகர் மக்கள் - எம்மை எமது வீடுகளுக்குச் செல்லவிடாமல் தடுத்துவைத்துக்கொண்டு பலமுறை எம்மை வந்து பார்வையிடுகிறீர்களே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கிறீர்கள் இல்லை எனத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து, குருநகர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிடாமலும் குருநகர் மக்களுடன் கலந்துரையாடாமலும் இவர்கள் திரும்பிச்சென்று, குறிகாட்டுவான் ஊடாக நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்றனர்.

நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்ற எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, அங்கு சமய வழிபாடுகளில் ஈடுபட்டுவிட்டு, அங்கு வசித்துவந்த பௌத்த மதகுருவுடனும் கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின்போது, "தொடர்ந்து இந்த நாகதீபத்தை பௌத்தத்திற்கு உரிய, சிங்கள மக்களுக்குரிய



கடற்படைப் படகில் அமைச்சர் குழுவினரும் சரத் பொன்சேகாவும்

இடமாகப் பாதுகாக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்த நாகதீப விகாரையை சிதைவடையவோ அல்லது வேறு யாரிடமோ கொடுதது விடாதீர்கள். இவ்விகாரையைத் தொடர்ந்து பேணுவதற்கு எம்மாலான சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவோம்'' என எதிர்க்கட்சித்தலைவ்வர் மகிந்த ராஜபக்ஷ பௌத்த குருவிடம் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து நெடுந்தீவிற்குச் செல்லவிருந்த மகிந்த ராஜபக்ஷவை நேரம் தாமதித்து விட்டது எனக்கூறி யாழ்.பிராந்திய இராணுவத்தளபதி தடுத்தார்.

இவ்வேளையில், அமைச்சர் மகேஸ்வரனுக்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் கருத்துமுரண்பாடு ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. அமைச்சர் மகேஸ்வரன் நெடுந்தீவிற்கு போவோம் என்றார். ஆனால், இராணுவத் தளபதி காரைநகர் போவோம் என்றார்.

இறுதியில் கொழும்பிலிரு[illegible] வந்த எதிர்க்கட்சித்தலைவர் உட்பட சில பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நாடாளும[illegible] உறுப்பினர்கள், இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுடன் கடற்படைப் படகொன்றில் காரைநகர் சென்றனர்.

இதேவேளை, அமைச்சர் மகேஸ்வரனும் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பௌசியும் சில பத்திரிகையாளர்களும் மற்றுமொரு கடற்படைப் படகில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனர். இறுதியில் எவரும் நெடுந்தீவிற்குச் செல்லவில்லை.

ஆனால், அமைச்சர் மகேஸ்வரனின் ஏற்பாட்டில் யாழ். வந்த மகிந்த ராஜபக்ஷ உட்பட பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நிகழ்ச்சி நிரலின்படி, குருகுல பாடசாலைத் திறப்பு விழாவை முடித்துவிட்டு யுத்தத்தினால் சிதைவடைநத தென்மராட்சியைப் பார்வையிடுவ[illegible]தும், பின்னர் நெடுந்தீவிற்குச் சென்[illegible] அங்கு ஈ.பி.டி.பியினருக்கு எதிராகப் போராட்டம் நடாத்திவரும் மக்களுடன் கலந்துரையாடுவதும் என நிகழ்ச்சி நிரல் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (லி)

## திருடும்போது தாக்கப்பட்ட நபர் யாழ்.ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு ஜன்னல் வழியே உட்புகுந்து திருட முயற்சித்தவேளை, வீட்டாரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன், சிகிச்சை பலனளிக்காது நேற்று அதிகாலை மரணமானார்.

இச்சம்பவத்தில் கனகரத்தினம் ஜெகதாஸ் என்ற இளைஞரே மரணமடைந்தவராவார்.

கடந்த 14 ஆம் திகதி பண்டத்தரிப்பு - கீரிமலை பிரதான வீதியிலுள்ள வீடு ஒன்றில் இரவு ஜன்னல் வழியே திருடும் நோக்குடன் உட்புகுந்தவேளை, வீட்டாரின் கொட்டன் தாக்குதலுக்கு இலக்காகி இவர் படுகாயமடைந்தார்.

பின் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை, அங்கே சிகிச்சை பலனளியாது மரணமாகியுள்ளார்.

இம்மரணம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிபதி மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

(கி,ச,ரா)

## அரசசார்பற்ற....

ஜோய் மகேஸ்வரன், அரசாங்கத் தரப்பில் பேனாட் குணதிலகவும் கலந்துகொண்டனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு சிறான் நடைமுறைப்படுத்த இருக்கும் திட்டங்கள் அதன் செயற்பாடுகள், வரையறைகள் குறித்தும் அப்போது விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் சிறான் ஊடாக செயற்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு திட்டங்களுக்கான நிதியை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாகவும்,

சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிறான் மற்றும் ஏனைய நிறுவனங்களும் எவ்வாறு இணைந்து பணியாற்றலாம் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தைப் பலப்படுத்தி அதன் ஊடாக பணியினை மேற்கொள்வது பற்றியும் ஆராயப்பட்டது.

## ஐ.தே.கவை....

யாடல் மாலை வரை நீடித்தது.

மேலும், எதிர்வரும் தேர்தலில் இரு கட்சியினரும் ஒன்றிணைந்து போட்டியிடுவது எனத் தீமானிக்கப்பட்டதுடன், தற்பொழுது பதவியில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பதவி கவிழ்ப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இவ்விரு கட்சியினருக்கும் இடையில் இணக்கம் காணப்படாத விடயமாகவுள்ள வடக்கு- கிழக்கு மக்களின் விடயத்தில், ஒரு கால அட்டவணையின் அடிப்படையில் சேர்ந்து பேசி இணக்கமான முடிவிற்கு வரமுயற்சிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது

கால அட்டவணையின் அடிப்படையிலான சந்திப்பு என்ற அடிப்படையில், அடுத்த வாரம் மீண்டும் ஜனாதிபதிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான சந்திப்பிற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்றைய சந்திப்பின்போது பொதுஜன முன்னணியின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மங்கள சமரவீர, லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் பொதுஜன முன்னணியின் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண ஆகியோரும்,

ஜே.வி.பியின் தரப்பில் அதன் செயலாளர் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ மற்றும் அனுர குமார திஸநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(01)

## கௌரவமான அரசியல்....

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவருக்கும் வாழச் சம உரிமையுண்டு. வடக்கிலே கடந்த 20 வருடகால யுத்தத்தினால் மக்களுக்குள்ள பிரச்சினையை நானறிவேன். தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. தற்போதைய அரசாங்கம் தொழிலாளரிற்கு எதிரான பல புதிய சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது.

முதன்முதல் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தையை எமது ஜனாதிபதிதான் தொடக்கி வைத்தார். பேச்சுவார்த்தையிலுள்ள குறைபாட்டை எடுத்துக் கூறவேண்டியது எதிர்க்கட்சியின் கடமை. சமாதானம் மூலம் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் கௌரவமான தீர்வொன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இந்த நாட்டிலே வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் கௌரவமான தீர்விற்கு எமது முழு ஆதரவையும் வழங்குவோம் எனக் கூறினார்.

## உண்மைக்குப் புறம்பானது...

இருந்தபோதிலும் - அவ்வாறான ஏதாவது சம்பவம் நடந்திருக்குமாக இருப்பின், அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாக, அது தொடர்பான விபரங்களை தந்துதவுமாறு குறித்த பத்திரிகை ஆசிரிய பீடத்தைத் தொடர்புகொண்டு, பொறுப்பிலுள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் கோரியபோதிலும் கூட, குறித்த பத்திரிகை அது தொடர்பான விபரங்களை வழங்கவில்லை.

ஆனால், உண்மையில் இவ்வாறான ஒரு சம்பவம் நடந்திருக்குமாய் இருந்தால்- குறித்த பத்திரிகைக்கு ஒரு சமூகப் பொறுப்புணர்வு இருந்திருக்குமாக இருந்தால, தான் பிரசுரித்த விடயம் உண்மையானது என மக்களுக்குக் கூற முயலும் அப்பத்திரிகை, பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அது தொடர்பான விபரங்களை வழங்கி, குறித்த சம்பவம் தொடர்பாக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க உதவி இருக்கலாம்.

துணைவேந்தருக்கும் எழுதப்பட்டதாக குறித்த பத்திரிகையால் கூறப்பட்டிருக்கும் இக்கடிதம், 16 ஆம் திகதி குறித்த பத்திரிகையில் வெளிவந்திருந்தபோதிலும், குறித்த செய்தி தொடர்பாக பல்கலைக்கழகம் விழிப்படையத் தொடங்கிய பின்னரே, அப்பத்திரிகையுடன் பல்கலைக்கழகம் தொடர்ச்சியான விளக்கம் கேட்டு தொடர்புகொண்டதன் பின்னரே, அதாவது 18.01.03 இலேயே - 4 நாட்களின் பின்னரே - துணைவேந்தர் அலுவலகத்தில் அக்கடிதம் இனங்காணப்படாத ஒரு நபரினால் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் - அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்ததுபோன்று, விடுதலைப் புலிகளுக்கு இதுவரை எந்தப் பிரதியும் சென்றடையவிலலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விடயத்தில், அக்குறித்த பத்திரிகை தொடர்பாக சந்தேகம் கொள்ளவேண்டிய தவிர்க்கமுடியாத நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், குறித்த பத்திரிகை வெளியிட்ட விடயம் எமது சமூகத்தைப் பொறுத்தவரை ஜீரணிக்க முடியாத, ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாகும். இவ்வாறான ஒரு செய்தியை சமூகப்பொறுப்பற்ற விதத்தில் அப்பத்திரிகை எழுதியமையானது, சமூகப்பொறுப்புள்ள எந்த ஒரு மனிதராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது ஆகும்.

தமது குறுகிய வர்த்தக நோக்கை அடிப்படையாகக் கொண்டு, பல்கலைக்கழகத்தினை சீண்ட முயல்வது மட்டுமல்ல, ஒட்டுமொத்தமான எமது சமூகத்தின் கௌரவத்தினையே கேள்விக்கு உள்ளாக்கும் விதத்தில் அப்பத்திரிகை குறித்த செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

இவ்வாறான கீழ்த்தரமான கற்பனைச் செய்திகளை ஒரு சமூகப் பொறுப்புள்ள பத்திரிகையாயின் நிச்சயமாக வெளியிடமாட்டாது என்றே கருதுகின்றோம்.

இந்த நிலையில், இச்செய்தி தொடர்பான உண்மை நிலையை வெளிக்கொண்டு வரக்கோரி பின்வரும் விடயங்களை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றிலிருந்து விரிவுரைகளை பகிஷ்கரிக்கின்றனர்.

1) குறித்த செய்தியில் உண்மை இருந்தால் அது வெளிப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்டிருக்கும் மாணவர்கள் மீது நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2) ஆனால், குறித்த பத்திரிகைச் செய்தி, உண்மைக்கு புறம்பானதாக இருந்தால் - குறித்த பத்திரிகை மீது பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இச்செய்தி தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குழப்பநிலையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்.

3) குறித்த செய்தி உண்மைகக்கு புறம்பானதாக இருந்தால் குறித்த பத்திரிகை தனது தவறினை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் எனப பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்

*(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)*

வடமராட்சியைப் பிறப்பிடமாகவும், கதிரிப்பாய், அச்சுவேலின[illegible] வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசிப்பவருமாக[illegible] ஐ.வைத்திலிங்கம் நேற்று (20.01.2003) திங்கட்கிழமை கொழும்[illegible] காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும், நவரஞ்சிதமணி, இரவீந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற ரஜனி மற்றும் லலிதா, துஷியந்தன் (சுடர்மணி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

*கதிரிப்பாய்,*
*அச்சுவேலி.*

(சி-517)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.05 | 156.35 |
| 1 யூரோ | 102.34 | 103.49 |
| 1 சுவிஸ் பிராங் | 69.93 | 71.00 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.29 | 57.56 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.79 | 25.79 |

... அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.